செயலாற்றுகை அறிக்கை - 2022



சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம்

உள்ளடக்கம்

01	உள்ளடக்கம்		3 – 3
02	அத்தியாயம் 01	தாபன ரீதியான வளமுகத் திரட்டு/ செயற்படுத்துவதன் பொழிப்பு	5 – 9
03	அத்தியாயம 02	முன்னற்றமும் தொலைநோக்கும்	10 - 58
04	அத்தியாயம 03	ஆண்டின் மொத்த நிதியியல் செயற்திறன்	59 - 82
05	அத்தியாயம 04	செயற்திறன் சுட்டி	83 - 85
06	அத்தியாயம 05	நிலைபேரான அபிவிருத்தி நோக்கினை (SDG) பூர்த்தி செய்து கொள்ளும் செயற்திறன	86 - 90
07	அத்தியாயம 06	மனித வளத்திரட்டு	91 - 98
08	அத்தியாயம 07	ஏற்புடைமை அறிக்கை	99 – 109
09	அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் புகைப்படங்கள்		I - I

அத்தியாயம் - 01

தாபன ரீதியான வளமுகத் திரட்டு / செயற்படுத்துவதன் பொழிப்பு

1.1 அறிமுகம்

2017 ம் ஆண்டின் 02 ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் திருத்திய 2013ம் ஆண்டின் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள முக்கிய பணியானது 17 இலட்சம் வறிய குடும்பங்களுக்கு சமுர்த்தி நலனுதவிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களை பொருளாதார ரீதியில் வலுவூட்டுவதற்கும். சமூக பாகுகாப்பு நிதியத்தின் மூலம் அக்குடும்பங்களின் நாளாந்த முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பங்களின் போது பாதுகாப்பினை வழங்குவதற்குறியதாக கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றது. இலங்கையில் வறுமையினை வேறோடு ஒழிப்பதற்காக அக்குடும்பங்களை வழுவூட்டுவதற்காக அவர்களது வாழ்வாதார மேம்பாட்டிற்குறிய வேலைத்திட்டங்கள், மற்றும் 1089 சமுதாய அடிப்படை வங்கிகள் ஊடாக நாடு பூராகவும் உள்ள அந்த வறிய குடும்பங்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்குத் தேவையான பல்வேறு குறுநிதிக் கடன்களை வழங்கல் இடம்பெறுகின்றது. இதற்கு மேலதிகமாக வறிய மக்கள் மற்றும் குறைந்த வறுமானம் பெறும் மக்களை ஒன்று திரட்டி சமுதாய அடிப்படை அமைப்பு வலையமைப்புக்களை உருவாக்கி செயற்படுவது அவர்களின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு பல்வேறு வேலைத்திடங்களை செயற்படுத்தவதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

1.2. நோக்கு மற்றும் பணி

நோக்கு

”2030ம் ஆண்டாகும் போது வறுமை நிலையற்ற வலுவூட்டப்பட்ட இலங்கையினை உருவாக்குவதற்காக செயற்படும் முன்னோடி நிறுவனம் ஒன்றாக ஆகுதல்”

பணி

வசதி வாய்ப்புகளற்ற நிலைக்குள்ளானதான மக்களை பொருளாதார, சமூக, பௌதீக, உள. சட்ட மற்றும் சுற்றாடல் ரீதியாக வலுவூட்டச் செய்யும் பொருட்டு வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதிவாய்ந்ததுமான வேலைத்திட்டங்களை மக்கள் பங்கேற்பினை பெற்றுக் கொண்டு நிலைபேரான முறைகள் ஊடாக செயற்படுத்துதல்.

குறிக்கோல்

2017 ம் ஆண்டின் 02 ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் திருத்திய 2013ம் ஆண்டின் 01ம் இலக்க சமுர்த்தீ சட்டத்தின் 4 வது அத்தியாயத்துக்கு அமைய திணைக்களத்தின் குறிக்கோல் பின்வறுமாறு.

(அ). வறுமையினை ஒழித்தல் மற்றும் சமூக நியாயத்தன்மையினை உறுதிப்பதுத்துகின்ற சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு தேவையான அபிவிருத்தி விடயங்களை நடைமுறைப்படுத்தல்.

(ஆ). தனிநபர், குஜம்பம், குழு மற்றும் சமூகத்தை மையமாகக் கொண்ட வாழ்வாதார பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளை விருத்தி செய்தல்.

(இ). ஒவ்வொரு நபர்கள் மற்றும் குடும்பங்களுக்கான உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.

(ஈ). தேசிய அபிவிருத்தியினை விரைவுபடுத்துவதற்காக மக்களை ஒன்று சேர்த்தல் மற்றும் வலுவூட்டல்.

(உ). மக்களின் வாழ்வாதார அபிவிருத்தியினை உயர்த்தும் விடயம் தொடர்பாக நுன'நிதி வசதிகளை வழங்கள்.

(ஊ). மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கு தேவையான பௌதீக மற்றும் சமூக அடிப்படை வசதிகளை விருத்தி செய்தல்.

(எ). மக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்குத் தேவையான கற்றல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஏ). மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமூகப்பாதுகாப்பும் தேவையானவர்களுக்கு சமூகப்பாதுகாப்பு வலைப்பின்னல் ஒன்றை நிர்மானம் செய்தல்.

1.3. செயற்படுத்துகின்ற முக்கியமான முறைகள்

2017ம் ஆண்டின் 02ம் இலக்க வாழ்வின் எழுச்சி மாற்றி அமைக்கப்பட்ட சட்டத்தினால் மாற்றப்பட்ட 2013ம் ஆண்டின் 01ம இலக்க சமுர்த்தி சட்டத்தின் ஒழுங்குகளுக்கு எற்ப திணைக்களமானது கீழுள்ள பிரகாரம் முக்கிய மூன்று முறைகளின் கீழ் செயற்படுகின்றது.

1. உத்தியோகக் கட்டமைப்புடனான திணைக்கள முறை.
2. சமுதாய அடிப்படை வங்கிக் கட்டமைப்பு முறை
3. சமுதாய அடிப்படை அமைப்பு முறை

1.3.1 உத்தியோக கட்டமைப்புடனான திணைக்கள முறை

சமுர்த்திச் சட்டத்தில் 7(1),(2),(3) அத்தியாயங்களுக்கு அமைய பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கு அமையவும் தேசிய சபை ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. அதில் 11 அங்கத்தவர்கள் உள்ளனர். திணைக்களத்தின் உத்தியோகக் கட்டமைப்பின அமைப்பானது கீழுள்ள பிரகாரம் உத்தியோக ரீதியான பதவிகளை கொண்டதாகும். பணிப்பாளர் தலைமையதிபதியின் உத்தியோகபூர்வமான தலைமைத்துவத்தின் கீழ் மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள் மூவருடன் 17 பிரதான பிரிவுகளின் தலைமையில் செயற்படுகின்றது. நிர்வாகம், தாபனம், விசாரணை, சட்டம், தகவல் தொழில்நுட்பம், ஓய்வூதியம், மனித வள அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு நலன்புரி, வாழ்வாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தியும், சுற்றாடலும், சமுதாய அடிப்படை அமைப்பு, தொழில் முயற்சி அபிவிருத்தி, திட்டமிடலும் நெறிப்படுத்தலும், நுன்நிதி (வங்கி/வங்கிச் சங்கம்), ஊடகம், நிதி மற்றும் கணக்காய்வு ஆகிய பிரிவுப் பொறுப்பு தலைமைகள், தலைமைக்காரியாலயத்திலும் 25 மாவட்டங்களிலும் உள்ளடங்குகின்ற விதத்தில் தனது பிரிவுகளின் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படுகின்றது. மாவட்ட மட்டத்தில் மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள் / மாவட்டச் செயலாளர்களின் நெறிப்படுத்தலின் கீழ் உள்ள மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள் மற்றும் அப்பணிக் குழு மூலம் மாவட்ட, பிரதேச செயலகப்பிரிவுகள், வலயங்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் சமுர்த்தி சட்டத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்குறிய கடமைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றது, சமுதாய அடிப்படை வங்கி நடவடிக்கைகள் சமுதாய அடிப்படை அமைப்புக்களை கட்டியெழுப்புதல், மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்களை கிராமிய மட்டத்தில் செயற்படுவது பிரதேச செயலாளர்கள் தலைமையில் பிரதேச உத்தியோகத்தர்களான சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட ஏனைய சகல அலுவலக மற்றும் கள உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. மொத்த ஊழியர்களின் எண்ணிக்கையானது 25,481 ஆகும்.

1.3.2. சமுதாய அடிப்படை வங்கிக் கட்டமைப்பு முறை

சமுர்த்தி யாப்பின் 25(1),(2),(3),(4) மற்றும் 29(1),(2),(3),(4) மற்றும் 34 வது அத்தியாயத்துக்கு அமைய சமுதாய அடிப்படை வங்கி , வங்கிச் சங்கம் மற்றும் மகாசங்கத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யவும் மற்றும் ஒழுங்குபடுத்தவும் அங்கத்தவர்கள் 08 பேரைக் கொண்ட முகாமைத்துவ சபை ஒன்னு நியமனம் செய்யப்பட்டுள்ளது. இப்பிரிவின் பணிப்பெறுப்பானது, தலைமைக் காரியாலயத்தின் நுன்நிதியப் பணியாளர் மற்றும் மற்றும் மகாசங்கத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் பணியாளர்கள் ஊடாகவும் மற்றும் நாடுபூராகவும் உள்ள பிரதேச செயலகங்கள் 335 இற்குறிய் சமுதாய அடிப்படை வங்கி, சமுதாய அடிப்படை வங்கிச் சங்கம், வலயம் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகள் மட்டத்தில் செயற்படுகின்ற 1089 வங்கிகளுக்குரிய சகல பணியாளர் மூலமாக இவ்வங்கி வலையமைப்பினை செயற்படுத்துகின்றது. அந்த வலையமைப்பின் ஊடாக சமுர்த்தி நிவாரணம் வழங்குதல், பயனாளிகளின் கட்டாய சேமிப்பு வைப்புக்களை பராமரித்துச் செல்லல், பயனாளிகளின் வைப்புக்களை பராமரித்துச் செல்ல மற்றும் சேமிப்பு அதிகரித்தல். பயனாளிகளுக்கும் குறைந்த வருமானம் பெறுவோருக்கும் குறுநிதிக் கடன்களை வழங்குதல் சேமிப்பு நிதியங்களை கூடியளவு நலன்கள் கிடைக்கப்பெறும் நிதி அமைப்புக்களில் முதலீடு செய்தல் மற்றும் ஏனைய சமூக நலன்புரி நடவடிக்கைகள் செயற்படுத்தப்படுகின்றது..

2022 ம் ஆண்டிற்குள், வாழ்வாதார நடவடிக்கைகளின் பொருட்டு வீட்டு, நுகர்வு, இடர் மற்றும் ஏனைய கடன் வசதிகள் தேவைப்படுகின்ற கிராமிய மக்களுக்கு 15 கடன் திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்டிருந்த மொத்தக் கடன்களின் பெறுமதியானது ரூபா மில்லியன் 19,273 ஆகும். அதற்குறிய கடன்களின் எண்ணிக்கையானது 192,491 ஆகும். 1999 இலிருந்து 2022 ம் ஆண்டு இறுதிவரை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த மொத்த கடன்களின் மொத்த பெறுமதியானது ரூபா மில்லியன் 424,906.53 ஆகும். அதற்குறிய கடன்களின் மொத்த எண்ணிக்கையானது 11,959,271 ஆகும். மொத்த வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கை 12,250,366 ஆகும். மொத்த வைப்புத் தொகை மில்லியன் 155,183 ஆகும். மேலும் இப்பிரிவின் சகல நடவடிக்கைகளும் புதிய தகவல் தொழில்நுட்ப முறையூடாக நடைமுறைப்படுத்தி மக்களுக்கு வினைத்திறன் மிக்கதும் தரம் வாய்ந்ததுமான சேவையொன்றினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


1.3.3. சமுதாய அடிப்படை அமைப்பு முறை

2017 ம் ஆண்டின் 02ம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் திருந்திய 2013ம் ஆண்டின் 01ம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் சமுர்த்தி மாவட்ட அமைப்பினை ஆரம்பிக்கும் பொருட்டு தேவையான கட்டளைகள் மற்றும் அமைப்பு விதிகள் (சமுர்த்தி சட்டத்தின் 42வது பிரிவு) உள்ளடங்களாக 2017ம் ஆண்டின் மார்ச் 07ம் திகதியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009/08 என்ற இலக்கத்தினையுடைய அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் சமுர்த்தி சட்டத்தின் அடிப்படை குறிக்கோளான வறுமையினை ஒழித்தல், மற்றும் சமூக சமத்துவத்தினை நிறைவேற்றும் பொருட்டு ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவும் உள்ளடங்குகின்ற பிரகாரம் தன்னார்வத்துடன் கூடுகின்ற சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களை ஆரம்பிப்பதும் (சமுர்த்தி சட்டத்தின் 15வது பிரிவு) சமுர்த்தி மாவட்ட குழுக்களை ஆரம்பிப்பதும் (சமுர்த்தி சட்டத்தின் 19 பிரிவு) செய்யப்பட்டுள்ளது. சமுதாய அடிப்படை அமைப்புக்களின் நடவடிக்கை தொடர்பான மேற்பார்வை, செயற்பாடு மற்றும் ஆலோசனை வழங்குவதற்கு அங்கத்தவர்கள் 18 பேரைக் கொண்ட சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் குழு ஒன்று தேசிய மட்டத்தில் ஒன்றுகூடுகின்றது. சமுதாய அடிப்படை அமைப்புக்களை உருவாக்கி, பலப்படுத்தி, மக்களை வலுவூட்டி, அவர்களை பொருளாதார, சமூக மற்றும் ஆத்மீக ரீதியாக அபிவிருத்தி செய்து சமுதாய அடிப்படை வங்கி மற்றும் வாழ்வாதார வேலைத்திட்டத்துக்கு உள்வாங்கும் நோக்கில் 2022 ம் ஆண்டாகும் போது சமுதாய அடிப்படை அமைப்புபக்கள் 30,128 ம், பிரதேச அமைப்புக்கள் 335 ம் மற்றும் மாவட்டக் குழுக்கள் 25 ம் செயற்பட்டு வருகின்றன.

1.4. திணைக்களத்தின் பிரதான பிரிவுகளும் அதன் கடமைப் பொறுப்புக்களும்.

தொடர் இலக்கம்	பிரிவு	கடமைப் பொறுப்பு
1	நிர்வாகப் பிரிவு	மனிதவள மற்றும் பௌதீக வள முகாமைத்துவம்
2	தாபனப் பிரிவு	மனிதவள ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு மற்றும் தனிநபர் கோவையினைப் பேணுதல்.
3	நிதிப் பிரிவு	அரச நிதி மற்றும் கணக்கு நடவடிக்கைகளை பேணுதல்.
4	வாழ்வாதார அபிவிருத்தப் பிரிவு	வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மாவட்ட, பிரதேச,கிராமிய மற்றும் சமுதாய மட்டத்தில் செயற்படுத்தப்படுகின்றது.
5	நுன்நிதிப் பிரிவு /மகாசங்கப் பிரிவு	நுன்நிதிக் கடன் வழங்கள், சேமிப்பு மற்றும் முதலீட்டினை வளர்ச்சியடையச் செய்தல், வங்கி மற்றும் வங்கிச் சங்கத்தின் மேற்பார்வை.
6	தொழில் முயற்சிப் பிரிவு	தோழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அபிவிருத்திக்காக பிரதேச,கிராமிய மற்றும் மக்கள் கருத்திட்டங்களை செயற்படுத்துதல்.
7	சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரிவு	சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
8	திட்டமிடல் மற்றம் செயற்பாட்டுப் பிரிவு	வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங் களைத் திட்டமிடல், முன்னேற்றப் பகுப்பாய்வு, மீளாய்வு செய்தல் மற்றும் மேற்பார்வை, அறிக்கையிடல். முற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்க உதவியாக இருத்தல்.
9	சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவு	சமுதாய அடிப்படை அமைப்பு, பிரதேச அமைப்பு, மற்றும் மாவட்டக் கமிட்டி உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத் துதல் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்
10	கணக்காய்வுப் பிரிவு	சமுர்த்திச் சட்டம் மற்றும் பொதுவான ஆலோசனைகளுக்கு அமைய கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் முகாமைச் செயற்பாடுகள்.
11	தகவல் தொழிநுட்பப் பிரிவு	தகவல் தொழிநுட்பச் செயற்பாடுகளைச் செயற்படுத்துதல் மற்றும் டிஜிடல் அடிப்படை வசதிகளை விருத்தி செய்தல்.
12	ஊடகப் பிரிவு	ஊடக மற்றும் விளம்பர வேலைத்திட்டங் களைச் செயற்படுத்துதல்.
13	மனிதவள அபிவிருத்திப் பிரிவு	உத்தியோகத்தர்களின் (மனிதவள) கொள்ளளவை விருத்தி செய்தல்.
14	சமூக நலநோம்பு மற்றும் சமூகக் காப்பீட்டுப் பிரிவு	அரசின் மானிய உதவி மற்றம் சமூகக் காப்பீட்டு நிதியத்தின் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத் தல்.
15	சட்டப் பிரிவு	சட்ட ஆலோசனை வழங்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
16	விசாரணைப் பிரிவு	ஊழியர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் மற்றும் புலனாய்வுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
17	ஓய்வூதியப் பிரிவு	ஊழியர்களது ஓய்வூதியம் தொடர்பான நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.

1.5 Organizational Structure



அத்தியாயம் – 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான வேலைத்திட்டங்களின் முன்னேற்றம்.

2.1.1 நிர்வாகப் பிரிவு

2.1.1.1 நிர்வாகப் பிரிவின் செயலாற்றுகை

நிர்வாகம், தாபனம், ஓய்வூதியம், சட்டம் மற்றம் புலனாய்வு பிரிவுகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். நிர்வாக செயற்பாடுகளின் போது முக்கொடுக்கக் கூடிய நாளாந்த நடவடிக்கைகள் மற்றும் கொள்ளைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் இந்தப்பிரிவின் கீழ் மேற் கொள்ளப்படும் பிரதான கடமையாகும்.

2.1.1.1.1 பிரதான நோக்கம்.

- ❖ ஆட்சேர்த்தல் மற்றும் பதவி உயர்வு கொள்ளையினை நடைமுறைப்படுத்தல்.
- ❖ பணியாளர்களை நன்றாகப் பேணுதல், ஒழுக்கத்தினை நடைமுறைப்படுத்தல், நாளாந்த கடமைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல்.
- ❖ நிறுவனத்தின் நல்ல இருப்பினை உறுதிப்படுத்தல்.
- ❖ காரியாலய ஒழுங்கைத் தயார் செய்தல் மற்றும் காரியாலயஎஒழுங்கு அமைப்பு வரைபடத்தினை தயார் செய்தல்.

2.1.1.1.2. **நாளாந்த கடமைகள்**

- ❖ நாளாந்த கடிதம் தொடர்பான செயற்பாடுகள்.
- ❖ பிரிவுகளில் மற்றும் பிரிவுகளுக்குள் ஒருங்கிணைப்பினைப் பேணுதல்.
- ❖ பொதுமக்கள் கோரிக்கைகளுக்கு பதிலளித்தல்.
- ❖ பணியாளர் சபை கோறிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.
- ❖ பணியாளர்கள் அணைவரினதும் தனிநபர் கோவைகளை பேனுதல், இற்றைப்படுத்துதல்.
- ❖ போக்க வரத்துப் பிரிவினை முகாமைத்துவம் செய்தல்.
- ❖ ஊழியர் சம்பளம், கொடுப்பனவு மற்றும் பிரயாணக் கொடுப்பனவு மற்றும் அணைத்துக் கொடுப்பனவுகளும் தொடர்பான பற்றுச் சீட்டுக்களுக்கு கொடுப்பனவுக்கான நடவடிக்கைகள்.
- ❖ வினைதிறன்கான் தடை தாண்டிப் பரீட்சை, போட்டிப்பரீட்சை, பதவி உயர்வுப் பரீட்சை ஒழுங்கமைப்பச் செய்தல்.
- ❖ உத்தியோகத்தர்களை உள்வாங்குவது தொடர்பாகன புள்ளிவிபர அறிக்கையினைப் பேணுதல்.
- ❖ மாவட்டங்களுக்கிடையிலான இடமாறற்ற நடவடிக்கைகள்.
- ❖ உத்தியோகத்தர்கள் தொடர்பான ஒழுக்க நிர்வாக நடவடிக்கைகள்.

2.1.1.1.3. விசேட ஒப்படை.

- ❖ நிர்வாகப் பிரிவிற்குறிய பாராளுமன்ற கேள்விகளுக்கான பதில் வழங்கள் மற்றும் அமைச்சுடனான ஒருங்கிணைப்பு.
- ❖ மக்கள் புகார் செயற்குழு கடமை நடவடிக்கைகள்.
- ❖ நிர்வாகப் பிரிவுக்குறிய கணக்காய்வு ஐய வினாவுக்கான பதில் தயாரித்தல் மற்றும் ஒருங்கிணைப்பு.
- ❖ பாராளுமன்ற ஆலேசனை செயற்குழுக் கூட்டங்கள்ல் மேலெழுகின்ற விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் அது தொடர்பாக பகுதித் தலைவர்களை அறிவூட்டல்.

- ❖ வினைதிறன்கான் தடை தாண்டிப் பரீட்சை, ஏனைய பதவி உயர்வுப் பரீட்சை நடாத்துதல்/தொடர்பாடல் செயற்பாடுகளை ஏற்படுத்துதல்.
- ❖ காணப்படுகின்ற வெற்றிடங்களை கவணத்தில் கொண்டு புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல்.

2.1.1.2 தாபனப் பிரிவு

திணைக்களத்தின் கீழ் சேவை செய்யும் அணைத்து சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தநி நபர்கோவை தொடர்பான கடமைகள் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய,

- ❖ ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்குமான வகுப்பு உயர்வுகளை வழங்குதல்,
- ❖ பணி ஸ்தீரம் செய்தல்,
- ❖ சட்ட ஒழுங்கு விதிகளுக்கமைய உத்தியோகத்தர்களைஉள்வாங்குதல்,
- ❖ ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் தேவைக்கு அமைய உள்நாட்டு , வெளிநாட்டு விடுமுறைக் கோறிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

2.1.1.3. புலணாய்வுப் பிரிவின் செயலாற்றுகை

2.1.1.3.1. இலக்கு

1. உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும் துர்நடத்தைகள் தொடர்பாக விசாரணை செய்து , ஒழுக்காற்றுத் தண்டனை வழங்குவதன் மூலம் அவர்களை சரியான வழியில் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
2. திணைக்களத்தின் மற்றும் அரச சேவையின் நற்பெயரினைப் பாதுகாத்தல்.
3. திணைக்கள ஊழியர்களிடத்தில் ஒழுக்கத்தினைப் பேணுவதற்கும் மற்றும் நிதி ஒழுக்கத்தினைப் பேணுவதற்றும் உறுதி செய்தல்.
4. மோசடியினைத் தடுத்து ஒழுங்கீனத்தைத் தடுப்பதற்காக தேவையான ஆலோசனைகள் / அவதானிப்புக்களை முன்வைத்தல்.

2.1.1.3.2. பிரிவின் கடமைச் செயற்பாடுகள்

- கிடைக்கம் முறைப்பாடு களுக்கமைய ஆரம்ப கட்ட விசாரணை மேற்கொள்ளல்.
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் மேற் கொள்ளும் விஸேட கணக்காய்வு பரிசீலனை தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளல்.
- விடுவிப்புக்கான காரணத்தை கோருதல் மற்றும் குற்றப்பத்திரம் வழங்கள்.
- முறையான ஒழுக்காற்று பரிசீலனை நடாத்தல்.
- ஒழுக்காற்றுக் கட்டளை வெளியிடல்.
- புதவிநிலை உத்தியோகத்தர்களுக்குரிய குற்றப்பத்திரிகை வரைவு அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு முன்வைத்தல்.
- ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு எதிரான மேன்முறையீட்டுக்கு அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.
- ஜனாதிபதி நுண்ணாய்வுப் பிரிவு, ஊழல் அல்லது மோசடி குற்றங்கள் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நீதிபதித் திணைக்களம், மற்றும் பாராளுமன்ற முறைப்பாட்டு குழு, போன்ற நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.

2.1.1.3.3. 2022 வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பணியின் சுருக்க அறிக்கை

- வருடத்தினுல் கிடைத்துள்ள ஆரம்பகட்ட விசாரணை அறிக்கைகள் - 22
- ஆரம்பகட்ட விசாரணை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்ட எண்ணிக்கை - 42

- கட்டாய லீவு /இடமாற்றம் / வேலை நிறுத்தம் செய்தவர்களின் எண்ணிக்கை - 26
- ஒழுக்காற்று நடவடிக்கையின் அடிப்படையில் மீள சேவையில் அமர்த்துதல் - 10
- வேலை நிறுத்தம் தொடர்பாக அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அணுப்பப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை - 14
- விடுவிப்புக்கான காரணம் கோறிய எண்ணிக்கை - 47
- விடுவிப்புக்கான காரணம் கோறுவது தொடர்பான தீர்மானத்தினை தெரியப்படுத்தல் - 36
- வெளியிடப்பட்ட குற்றப்பத்திரிகைகளின் எண்ணிக்கை - 72
- அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அணுப்பப்பட்ட குற்றப்பத்திர நகல் வரைவுகளின் எண்ணிக்கை - 06
- மாற்றத்துக்குற்படுத்திய குற்றப்பத்திரிகைகளின் எண்ணிக்கை - 22
- நியமிக்கப்பட்ட நியாய மன்றங்களின் எண்ணிக்கை - 13
- பரிசீலனை சபைக்கு, அரச தரப்பு வழக்க தொடரும் உத்தியோகத்தர் / குற்றவாளிக்கு குறிப்பிட்ட ஆவணங்களை வழங்குதல். - 23
- வழங்கப்பட்டுள்ள ஒழுக்காற்று கட்டளைகளின் எண்ணிக்கை - 112
- அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அணுப்பப்பட்ட ஒழுக்காற்றுக் கட்டளை நகல் வரைவுகளின் எண்ணிக்கை - 09
- பணி நீக்கம் செய்தவர்களின் எண்ணிக்கை - 05
- அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அணுப்பப்பட்ட 3 வது அனுபந்தம்களின் எண்ணிக்கை - 19
- மேன்முறையீட்டுத் தீர்மாணத்தினை அறிவித்தல் - 08
- முடிவடைந்துள்ள கோவைகளின் எண்ணிக்கை - 103
- செயற்படுத்த மீதியாக உள்ள ஒழுக்காற்றுக் கோவைகளின் எண்ணிக்கை - 705

2.1.1.3.4. எதிர்காலத் திட்டம்

- விடய அறிவுடன் கூடிய நுண்ணாய்வு முகாமையாளர் ஒருவரை முழுநேர கடமைக்காக பிரிவுக்கு உள்வாங்குதல் மற்றும் மாவட்ட நுண்ணாய்வு முகாமையாளர் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளல்.
- பிரிவின் காரியாலயச் சூழலை மேம்படுத்தல்.
- வருடத்தினுல் ஆரம்பிக்கப்படும் கோவைகளில் 50% தினை வருடத்தினுல் முடித்தல்.
- பிரிவு உத்தியோகத்தர்களின் செயலாற்றுகை மதிப்பீட்டு முறை ஒன்றினை அறிமுகப்படுத்துதல்
- அணைத்துப் பணியாளர் சபைக்கும் நிர்வாக சட்டம் மற்றும் ஒழுக்க செயற்பாட்டு ஒழுங்கு விதிகள் தொடர்பாக முறையான பயிற்சி ஒன்னினை வழங்குதல்.
- வேலை முடிக்கப்பட்ட கோவைகளை முறையாக வெளியேற்றும் முறை ஒன்றினை உருவாக்குதல்.

2.1.1.4. ஓய்வூதியப் பிரிவு.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தக்கு உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களின் அரம்ப சேவை மற்றும் புதிய சேவை தொடர்பான வாக்கினைக் கொடுத்து உள்வாங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய சம்பள உரிமையினை வழங்குவது ஓய்வூதியப் பிரிவினல் மேற்கொள்ளப்படுகின்ற பிரதான கருமமாகும்.

அதன்படி 2019 ம் ஆணடு ஆகஸ்ட் 01 ம் திகதியில் இருந்து திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவின் கீழ் இந்தப் பிரிவு உருவாக்கப்பட்டது. அன்று தொடக்கம் இன்று வரை ஓய்வூதியத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றறிக்கை மற்றும் மேலதிகமாக

வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு ஓய்வூதிய சம்பள பிரதிபலன் உறிமைக் கொடுப்பனவு செயற்படுத்தப்படுகின்றது.

இங்கு அதிகார சபையினுல் செயற்பட்டு அதற்கமைய தனிநபர் கோவை பேணப்பட்டுநடவடிக்கை எடுக்கப்பட்ட தாபன முறைக்குள் பொது 53 னடத்தைக் குறிப்பு ஆகியவை ஆரம்ப நியமனத்திகதியிலி இருந்து உத்தியோகத்தர் ஓய்வூதியம் பெரும் / இறந்த தினம் வரை நியமனத்துடன் தொடர்பான அணைத்துத் தகவல்களும் முறையாக உள்வாங்கி பதிவிடும் சில சந்தர்பங்களில் சிக்கள் நிலை உருவாகுவதுடன், இதனைத் தீர்த்துக் கொள்வதற்காக மிகக் கஸ்டப்பட்டு செயற்படுத்திய அணைத்து அணைத்து உத்தியோகத்தர்களும் முகம் கொடுத்த சவாலாகும்.

இந்த அணைத்து விடயங்களும் ஓய்வூதியச் சுற்றறறிக்கை, சட்டவிதிகள் மற்றும் ஓய்வூதியச் சட்டக் கோவை ஆகியவற்றுடன் சீர் செய்து 2019 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரிவினால் 2022.12.31 திகதிக்கு ஓய்வூதியம் பெற்ற மற்றும் இறந்த உத்தியோகத்தர்கள் 1812 பேரில் 1342 உத்தியோகத்தர்களுக்கான கோவைகள் ஓய்வூதியத் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் உத்தியோகத்தர்கள் 1212 பேர் தற்போது ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

இந்த விடயத்தினை விணைதிறனாகவும் மற்றும் இற்றைப்படுத்திப் பேணுவதற்கு தொடராக முன்னேற்றப் பகுப்பாய்வு மற்றும் Zoom உடாக நடாத்தப்பட் வேலைத்திட்டங்கள் பயனாக இருந்தது.

2.1.1.4.1. ஓய்வூதியம் வழங்களின் முன்னேற்றம் . 2022.12.31ம் திகதிக்கு அட்டவணை.க் குறிப்பு – (I)

தொடர் இலக்கம்	காரணம்	ஓய்வூதியம் பெற்றவர்களின் எண்ணிக்கை	இறந்தவர்களின் எண்ணிக்கை	கூட்டுத் தொகை
1	ஓய்வூதியம் பெற்றவர்களின் எண்ணிக்கை	1402	410	1812
2	உத்தியோகத்தர்களினால் தேவையான தகவல்கள் வழங்காமையினால் முன்னெடுக்க முடியாத கோவைகளின் எண்ணிக்கை.	11	24	35
3	ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டிய மொத்த எண்ணிக்கை	1391	386	1777
*4	ஓய்வூதிய திணைக்களத்துக்கு முன்வைத்த எண்ணிக்கை.	1152	190	1342
5	ஓய்வூதியம் வழங்குவதற்காக சமுத்தி திணைக்களத்தில் மீதியாக உள்ள எண்ணிக்கை	239	196	435
*4	ஓய்வூதிய திணைக்களத்துக்கு முன்வைத்த எண்ணிக்கை.	1152	190	1342
2022.12.31 இல் மொத்த கொடுப்பனவின் கூட்டுத்தொகை		1060	152	1212
ஓய்வூதிய திணைக்களத்தில் கொடுப்பனவுக்காக உள்ள மீதி.		92	38	130

2.1.1.5. சட்டப் பிரிவின் செயலாற்றுகை

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் அணைத்துப் பிரிவுகளுக்குமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது தேவைப்படும் சட்ட விடயங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்கள், வட்ட உதவிகளை வழங்குதல், திணைக்களத்தின் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி , சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகளை சட்டரீதியாக வழுவூட்டுவதற்கு தலையிட்டு உற்பத்தித்

திறனை அதிகரிக்கச் செய்து, திணைக்களத்தினால் மற்றும் திணைக்களத்திற்கு எதிரான செயற்பாடுகளின் போது சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சரியான ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதும் சட்டப்பிரிவின் கடமைப் பொறுப்புக்களாகும்.

2.1.2. சமூக நலநோம்பு பிரிவின் மற்றும் சமூகப் பாதுகாப்பு திதியம்

2.1.2.1. சமூக நலநோம்பு வேலைத்திட்டம்.

2.1.2.1.1. அறிமுகம்

வறுமை நிலையினை இல்லாதொழிக்கும் அடிப்படை நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்ற அரசின் முக்கியமான வேலைத்திட்டமாக 1994 ம் ஆண்டிலிருந்து இன்றுவரை சமுர்த்தி வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த வேலைத்திட்டம் இலங்கை சமுர்த்தி அதிகார சபை மற்றும் சமுர்த்தி ஆணையாளர் திணைக்களம் என இரண்ட நிறுவனங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டதுடன் மானிய உதவி வேலைத்திட்டம் சமுர்த்தி ஆணையாளர் திணைக்களத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டது.

அதேபோல் 2013 இலக்கம் 01 உடைய வாழ்வின் எழுச்சி சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் 2017.இலக்கம் 02 உடைய சமுர்த்தி சட்டத்தின் மூலம் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமாக மாற்றியமைக்கப்பட்டது. அதன்படி மானிய உதவி வேலைத்திட்டம் இத் திணைக்களத்தின் சமூகப்பாதுகாப்பு மற்றும் நலநோம்புப் பிரிவின் கீழ் தற்போது செயற்பட்டு வருகின்றது.

2.1.2.1.2. மானிய உதவி வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கம்.

- வறுமையான மக்களின் போசனைத் தேவையினை நிறைவு செய்தல் மற்றும் அபிவிருத்தித் தேவைகளுக்கு அவர்களை வரிசைப்படுத்தல்.
- வீடடுச் சீடடிழுப்பு நிதியத்துக்கு பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளல்.
- கட்டாய சேமிப்பின் ஊடாக குறைந்த வருமானம் பெறுகின்றவர்களை நிதி ரீதியாக வலுவூட்டல்.
- சுமூகப்பாதுகாப்பு வேலைத்திட்டத்துக்கு பங்களிப்பினைப் பெற்று அந்தக் குடும்பங்களுக்கு எதிர்பார்த்த மற்றும் எதிர்பார்க்காத அபாயமான சந்தர்ப்பங்களில் நிதியினை வழங்கள்.

2.1.2.1.3 மானிய உதவி வகைப்படுத்தல்

அட்டவணைக் குறிப்பு – (II)

சமுர்த்தி மானிய உதவிக் கட்டமைப்பு

குடும்ப அங்கத்தவர்கள் எண்ணிக்கை	மானிய உதவியின் பெறுமதி (ரூ.)	மானிய உதவி பிரிக்கப்படும் முறை			
		கட்டாய சேமிப்பு (ரூ.)	சுமூகப்பாதுகாப்பு நிதியம் (ரூ.)	வீட்டு சீட்டிழுப்பு நிதியம் (ரூ.)	புயனாளிக்கு வழங்கும் தொகை(ரூ.)
04 அல்லது 04 கக்கு மேல்	4500/-	400/-	200/-	100/-	3,800/-
3	3200/-	300/-	150/-	100/-	2650/-
03 க்கு கீழ்	1900/-	170/-	130/-	100/-	1500/-
நிறுவனத்துக்கு	1900/-	-	130/-	100/-	1670/-
வலுவூட்டப்பட்ட	420/-	120/-	200/-	100/-	-

2.1.2.1.4. சமுர்த்தி மானிய உதவிக் குடும்பம்.

ஒரே வீட்டினுல் வசிக்கும் தந்தை உட்பட திருமணமாகாத பிள்ளைகள் மற்றும் அந்தக் குடும்பத்தில் தங்கி வாழ்கின்ற வயது வந்தோர் மற்றும் ஏனையவர்கள் ஒரு குடும்பமாக மதித்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

2.1.2.1.5. சமுர்த்தி மானிய உதவிக் குடும்பம் ஒன்றினைத் தெரிவு செய்யும் போது கவணத்தில் கொள்ளப்படும் பிரதான மூலப்பிரமாணங்கள்.

i. கல்வி
ii. சுகாதாரம்
iii. குடும்பத்தின் பெபாருளாதாரத் தன்மை
iv. சொத்துக்கள்
v. வீட்டின் தன்மை
vi. குடும்பத்தின் மக்கள் பறப்பு

2.1.2.1.6 மானிய உதவி அனுமதித்தல்.

பிரிவு மட்டத்தில் பெற்றுக் கொள்ளப்படுகின்ற பெயர் பட்டியல் கவணத்தில் கொள்ளப்பட்டதன் பின், கிராமிய குழுவின் சிபார்சினைப் பெற்று, வங்கி வலய முகாமையாளரினால் குறித்த பிரதேச செயலாளருக்கு கையளிக்கப்படுகின்ற பயனாளி பட்டியல் கவணத்தில் கொள்ளப்பட்டு விண்ணப்பதாரிக்கு சமுர்த்தி மானிய உதவி பெறுகின்ற உரிமையினை வழங்குகின்ற அதிகாரம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.1.2.1.7. மேன் முறையீடு / எதிர்ப்பு

மானிய உதவி பெறுவதற்கு தனக்குத் தகைமைகள் இருந்தும் கிடைக்கவில்லை எனக் கருதுவாராயின் அது தொடர்பான மேன் முறையீட்டினை மாவட்ட செயலாளருக்கு கையழிக்க வேண்டும். அங்கு எடுக்கப்படும் தீர்மானம் தொடர்பாக திருப்திப்படாவிடின் பிரதான மாரியாலயத்தின் சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்துக்கு முன்வைக்க வேய்டும்.

2.1.2.1.8 சமுர்த்தி மானிய உதவி கிடைக்காமல் போதும் சந்தர்ப்பங்கள்.

i. ஆரச தொழில் ஒன்றில் ஈடுபடுவதன் காரணமாக ஓயிவூதியச் சம்பளத்துக்கு உறித்துடைய ஒருவர் குடும்பத்தினுல் இருத்தல்.
ii. வருமானம் உழைக்கின்ற செயற்பாட்டினுடாக உயர் வருமானம் பெறுகின்ற வலுவூட்டப்பட்ட குடும்பங்கள்.
iii. தொழிலுக்காக வெளிநாட்டுக்குச் சென்று 06 மாதங்கள் பிந்தியவர்கள், இருக்கும் குடும்பங்கள்.
iv. கிராமியக் குழுவினால் அறியப்பட்ட போதிய நாளாந்த வருமானம் பெறக் கூடிய பயிற்றப்பட்ட உழைப்பாளிகளைக் கொண்ட குடும்பங்கள்.

2.1.2.1.9. மதகுருமாருக்கு மானிய உதவி வழங்கள்

மதகருமாருக்கு உறித்தான மானிய உதவியானது தனிநபருக் குறித்தான ரூபா 1500.00 உடைய மானிய உதவி பெறுமதி ஆகும். 18 வயதுக்குக் குறைந்த மதகுருமாருக்கு உறித்தான மானிய உதவித் தொகை நிறுவனத்தின் சட்டரீதியான பொறுப்பாளியின் கணக்கில் வரவு வைக்கப்படும். இந்த மதரீதியான நிறுவனங்கள் அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

2.1.2.1.11 மானிய உதவிப் பணத்தினை பயனாளிகளுக்கு விடுவித்தல்.

மானிய உதவி வழங்குவதற்குத் தேவையான பணத்தினை பயனாளி முகாமைத்துவ மொடியுலூடாக சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மட்டத்தில் வழங்கப்படுகின்ற மாதார்ந்த உச்ச அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு பிரதான காரியாலயத்தில் இருந்து சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளின் சொந்த நடைமுறைக் கணக்குகளுக்கு மின்னியல் முறையில் பணம் அனுப்பப்பட்டதன் பின் பயனாளிகளின் சேமிப்பு கணக்கின் ஊடாக பணம் கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

2.1.2.1.12. கடந்த 05 வருடங்களில் சமுர்த்தி மானிய உதவி பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் செலவு (2018 – 2022)

அட்டவணைக் குறிப்பு – (III)

வருடம்	பயனாளிகளின் எண்ணிக்கை	செலவு(ரூ).
2018	1,384,021	39,257,773,920.00
2019	1,800,182	44,676,637,360.00
2020	1,770,086	52,471,893,980.00
2021	1,760,485	51,550,652,440.00
2022	1,727,266	63,705,938,820.00

2022 ம் ஆண்டில் சமுர்த்தி மானிய உதவிப் பயனாளிகளின் எண்ணிக்கை மாவட்ட அடிப்படையில்

அட்டவணைக் குறிப்பு – (IV)

தொடர் இலக்கம்	மாவட்டம்	2022 (ஜனவரி இருந்து நவம்ார் வரை)					2022 டிசம்பர்				
		420/=	1,500/=	2,500/=	3,500/=	மொத்தம்	420/=	1,900/=	3200/=	4,500/=	மொத்தம்
		ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை
1	கொழும்பு	510	25,746	10,175	16,840	53,271	454	25,586	9,867	15,769	51,676
2	கம்பஹா	3,334	54,173	27,879	51,421	136,807	3,017	55,017	27,055	48,647	133,736
3	களுத்தறை	3,419	31,721	12,966	22,374	70,480	3,140	31,946	12,614	20,705	68,405
4	கண்டி	2,308	44,977	17,199	34,055	98,539	2,074	44,960	16,644	32,069	95,747
5	மாத்தளை	1,387	23,309	9,856	17,855	52,407	1,292	23,505	9,333	16,738	50,868
6	நுவரஎழிய	4,283	24,404	10,913	13,663	53,263	3,369	25,328	10,599	13,387	52,683
7	காலி	4,244	29,170	15,453	31,465	80,332	3,654	29,894	15,279	29,215	78,042
8	மாதறை	1,222	29,154	13,247	25,762	69,385	1,134	28,856	12,876	24,183	67,049
9	ஹம்பந்தொட்டை	1,487	20,990	13,434	28,663	64,574	1,377	21,215	12,972	27,467	63,031
10	யாழ்ப்பாணம்	2	24,842	14,182	39,426	78,452	4	25,047	14,181	39,310	78,542
11	மன்னார்	236	6,812	4,206	11,586	22,840	237	7,035	4,055	11,340	22,667
12	வவுனியா	299	7,293	4,709	11,271	23,572	283	7,411	4,600	11,023	23,317
13	முல்லைத்தீவு	15	7,827	4,883	11,555	24,280	14	8,017	4,694	11,463	24,188
14	கிளிநொச்சி	22	7,652	4,242	11,902	23,818	50	7,593	3,844	11,021	22,508

தொடர் இலக்கம்	மாவட்டம்	2022 (ஜனவரி இருந்து நவம்ார் வரை)					2022 டிசம்பர்				
		420/=	1,500/=	2,500/=	3,500/=	மொத்தம்	420/=	1,900/=	3200/=	4,500/=	மொத்தம்
		ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை	ஏண்ணிக்கை
15	மட்டக்களப்பு	9,131	33,366	18,552	38,234	99,283	8,716	34,604	18,161	36,888	98,369
16	அம்பாறை	7,394	33,899	16,412	31,736	89,441	7,249	35,263	15,505	29,424	87,441
17	திருயேகாணமலை	1,061	21,924	12,094	25,323	60,402	872	22,340	11,545	24,266	59,023
18	குருணாகல்	5,512	64,604	32,215	66,115	168,446	5,307	64,328	30,785	62,053	162,473
19	புத்தளம்	588	28,285	11,806	23,200	63,879	675	27,924	11,556	22,331	62,486
20	அனுராதபுரம்	1,739	33,892	14,029	22,494	72,154	1,580	34,404	13,008	20,733	69,725
21	பெலன்நறுவ	1,884	11,067	8,451	14,582	35,984	1,668	11,327	8,057	13,606	34,658
22	பதுள்ளை	1,787	31,963	14,934	26,843	75,527	1,632	33,016	14,576	25,473	74,697
23	மொணராகல	3,869	20,929	12,207	20,341	57,346	3,464	21,617	12,054	19,293	56,428
24	இரத்திணபுரி	5,059	35,375	26,562	55,641	122,637	5,205	35,917	26,198	53,778	121,098
25	கேகாலை	4,427	24,529	13,613	27,808	70,377	4,105	24,730	13,290	26,284	68,409
மொத்தம்		65,219	677,903	344,219	680,155	1,767,496	60,572	686,880	333,348	646,466	1,727,266

* 2022 ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இருந்து அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைய மானிய உதவிப் பெறமதி மாற்றியமைக்கப்பட்டது.

** ரூபா 420.00 (பொருளாதார ரீதியில் வலுவூட்டப்பட்ட குடும்பங்கள்) பிரதிபலன் தொகை 2022ம் ஆண்டு மே, ஜூன்,ஜூலை,செப்தெம்பர்,ஒக்தோபர் ஆகிய மாதங்களில் வழங்கப்படவில்லை.

2.1.2.2 சமுர்த்தி சமூக பாதுகாப்பு வேலைத்திட்டம் / சமுர்த்தி தேசிய அபிவிருத்தி பொறுப்பு நிதியம் .

2.1.2.2.1 அறிமுகம்

இலக்கம் 8 உடைய நம்பிக்கை உறுதி ஊடாக 1997.01.01 திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தின் கீழ் சமுர்த்தி தேசிய அபிவிருத்தி பொறுப்பு நிதியம் .ஆரம்பித்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சமூக பாதுகாப்பு நிதியம் இலாபமற்ற அடிப்படையில் நலநோன்பு நோக்கினை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சமுர்த்திப் பயனாளிகளின் சுயேட்சையான மாதாந்த பங்களிப்பு, வங்கி முதலீடுகள் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தினூடாக நிர்வகிக்கும் நிலாவெளி சமுர்த்தி பயிற்சி மத்திய நிலையம் போன்ற நிறுவனங்களினால் கிடைக்கும் வருமானத்தின் மூலமும் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

2013 இலக்கம் 01 உடைய வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி யாப்புக்கு அமைய வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் ஆரம்பிக்கம் போது சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் செயற்பாடுகள் அவ்வாரே நடைமுறைப்படுத்துவதாக இதனுடன் தொடர்புபடுத்தப்பட்டது. ஆதற்கமைய வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் வாழ்வின் எழுச்சி சமூக பாதுகாப்பு நிதியமாக செயற்படுத்தப்பட்டதுடன், 2017 ம் ஆண்டு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமாக பெயர் மாற்றப்பட்டதுடன் இந்த நிதியம் சமுர்த்தி தேசிய அபிவிருத்தி பொறுப்பு நிதியம் என்ற பெயரில் செற்படுத்தப்படுகின்றது. 11 அங்கத்தவர்களைக் கொண்ட சமூக பாதுகாப்பு பொறுப்பு சபையினால் நிதிய முகாமைத்துவம், பரிபாலனம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு

குறிப்பிட்ட தீர்மாணங்கள் எடுக்கப்படுகின்றது. ஆத்தீர்மாணங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திணைக்கள உத்தியோகத்தர்கள் மேற்கொள்ளும் கடமைகளுக்கு மேலதிகமாக இந்த கடமைகளுக்கம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

2.1.2.2.2. நோக்கம்

- சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் சமூகத்தில் பின்தள்ளப்பட்ட நிலைக்குள்ளான நபர்கள், குழுக்கள், எதிர்பாராமல் மற்றும் எதிர்பார்த்து முகம் கொடுக்க வேண்டிய நிதிக் கஸ்டங்களைக் குறைத்து அவர்களின் சமூக மற்றும் வாழ்க்கை நிலையினை பாதுகாப்பது, சமூக பாதுபாப்பு முறை ஒன்றினை நடைமுறைப்படுத்துவது.

- பயனாளி மக்களின் போசனை மட்டத்தினை உயர்த்துவதுடன் சுகாதாரத்துடன் கூடிய சூழல் ஒன்றினை உருவாக்குவதனூடாக அவர்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையினை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- மேலதிக நிதியினை கூடிய வட்டி வீதத்துக்கு அரச வங்கிகளில் முதலீடு செய்வதன் மூலமும் நிலாவெளி பயிற்சி நிலையத்தின் வருமானத்தினை உயர்த்துவதன் ஊடாகவும் நிதியத்தினை உறுதிப்படுத்துதல்.

2.1.2.2..3. கருத்திட்டம் அல்லது செயற்பாடுகள் தொடர்பான அறிமுகம்.

சமுர்த்தி பயனாளிகளினால் சுய விருப்பில் வழங்குகின்ற மாதாந்த பங்களிப்பு தொகையினை மற்றும் அந்த பங்களிப்பு பணத்தில் பிரதிபலன் கொடுப்பனவு வழங்கப்பட்டதன் பின் மீதியான பணம் அரச வங்கிகளில் முதலீடு செய்து அதனூடாக உழைக்கின்ற வட்டி வருமானத்தின் மூலம் இந்த நிதியம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியத்தினால் சமுர்த்திப் பயனாளிகள், குறைந்த வருமானம் பெறுகின்றவர்கள் மற்றும் பின்தள்ளப்பட்ட நிலைக்குள்ளான நபர்கள், குழுக்கள் போன்றவர்களுக்கு பிதானமாக பிறப்பு, இரட்டைப் பிள்ளைப் பிறப்பு, திருமணம், வைத்தியசாலை அனுமதி, இறப்பு மற்றும் சிப்தொர புலமைப் பரிசில் போன்ற எதிர்பார்த்த எற்றும் எதிர்பார்க்காத நிகழ்வுகளுக்கு காப்பீட்டு முறை என்ற வகையில் பிரதிபலன் வழங்கப்படுகின்றது.

இதற்கு மேலதிகமாக சமுர்த்தி சமூக பாதுகாப்பு நம்பிக்கை சபையின் அனுமதியின் கீழ் சமூகத்தில் பின்தள்ளப்பட்ட நிலைக்குள்ளான நபர்கள், குழுக்கள் நிறுவனங்களுக்கு நிதி மற்றும் பொருள் உதவிகள் வழங்கப்படுகின்றது. மேலும் அந்த நிதியம் நிர்வாகம் மற்றும் முகாமைச் செயற்பாடுகளுக்கு தேவையான செலவுகளை மேற்கொள்கின்றது.

அவ்வாரே நிதியத்துக்கு உறித்தான நிலையான சொத்தான நிலாவெளி சமுர்த்தி பயிற்சி நிலையம், பொதுவில் சுற்றுலா விடுதி, உள்ளக மற்றும் ஏனைய வெளியக நிறுவனங்களக்கு விடுதி வசதி, பயிற்சி, விரிவுரைகள், மற்றும் வேலைத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2.1.2.2.4. இலக்குக் குழு :-

I. சமுர்த்தி பயனாளி குடும்பங்களின் அங்கத்தவர்கள்.

II. சமூகத்தில் பின்தள்ளப்பட்ட நிலைக்குள்ளான நபர்கள், குழுக்கள் நிறுவனங்கள்

2.1.2.2.4. செயற்படுத்தும் முறை.

சமுர்த்தி பயனாளிகள் தமக்குறித்தான ரூபா 4500.00, ரூபா 3200.00, ரூபா 1900.00 ஆகிய மானிய உதவிப் பெறுமதிக்கமைய முறையாக சுய விருப்பில் தருகின்ற ரூபா 200.00, ரூபா 150.00, ரூபா 130.00 ஆகிய மாதார்ந்த பங்களிப்பினைப் பயன்படுத்தி பிறப்பு, இரட்டைப் பிறப்பு, மரணம், விவாகம், வைத்தியசாலை அனுமதி மற்றும் சிப்தொர புலமைப் பரிசில் போன்றவற்றிற்கு சமூகப் பாதுகாப்பு பிரதிபலன் வழங்கப்படுகின்றது.இந்த பிரதிபலன் வழங்கியதன் பின் மீதியான தொகையினை கூடிய வட்டிவீதத்தின் கீழ் அரச வங்கிகளில் முதலீடு செய்யப்படுகின்றது. இந்த செயற்பாடுகளின் போது நிச்சயமாகக் காணக்கூடிய செயற்பாடாக அமைவது சிப்தொர புலமைப் பரிசில் மடடுமேயாகும். எனவே வருடத்துக்கு கா.பொ.த.(சா.த) சித்தியடைந்த உயர்தரம் கற்கும் அணைத்து சமுர்த்தி பயனாளி மாணவ மாணவிகளுக்கு சிப்தொர புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. ஏனைய அணைத்து நிகழ்வுகள் தொடர்பாகவும் சரியான கணக்கெடுப்பொன்று காண முடியாவிடினும் விண்ணப்பிக்கின்ற பயனாளி கோறிக்கைகளுக்கு சுற்றறிக்கைக்கு அமைய கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. குறித்த நிகழ்வு தொடர்பாக பிரதிபலன் கொடுப்பனவு செயற்பாடு பின்வருமாறு.

2.1.2.2.5. கொடுப்பனவுச் செயற்பாடு.

பிரிவு ⟶ வலயக் காரியாளயம் (சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி) ⟶ பிரதேச செயலகக் காரியாலயம் ⟶ (சமுர்த்தி தலைமையகம்) ⟶ மாவட்ட செயலகக் காரியாலயம். பிதான காரியாலயத்தின் சமுர்த்தி சமூக பாதுகாப்பு நிதியம்.

அதற்கமைய வருட ஆரம்பத்தில் அதற்கான நிதி பிரதான காரியாலயத்தின் சமூக பாதுகாப்புப் பிரிவினால் அனைத்து பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கும் முற்பணத் தொகை ஒன்று விடுவிக்கப்படுகின்றது. அந்த முற்பணத் தொகையினைப் பயன்படுத்தி பிரதிபலன்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டியதுடன், அதன் பின் குறிப்பிட்ட செலவு நிதியீட்டம் செய்யப்படல் வேண்டும்.

குறிப்பிட்ட நிகழ்வுக்கு பிரிவுக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தரினால் முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்பு பிரதிபலன் விண்ணப்பப்படிவத்துடன் குறிப்பிட்ட கடித ஆவணங்கள் வலயத்துக்குப் பொறுப்பான முகாமையாளரிடம் அல்லது சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளரிடம் கையளிக்கப்படல் வேண்டும். அவரின் சிபார்சுடன் பிரதேச செயலக தலைமைப்பீட முகாமையாளரிடம் கையளிக்கப்படல் வேண்டும். தலைமைப்பீட முகாமையாளரின் அனுமதி பெறப்பட வேண்டியதுடன், பிரதேச செயலக விடயப் பொறுப்பு உத்தியோகத்தரினால், தயாரிக்கப்பட்ட புலமைப் பரிசில் பெறுவோர் பெயர் பட்டியலினை பிரதேச செயலாளரின் அனுமதிக்காக முன்வைக்கப்படும். அதன் பின் பிரதேச செயலக கணக்காளரினால் செலவு உறுதிப்படுத்தப்பட்டதன் பின் குறிப்பிட்ட பயனாளிக்கு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி ஊடாக கொடுப்பனவு வழங்கப்படுவதுடன், மேலும் 2022 இல் 25 மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 25 வங்கிகளில், சமுர்த்தி பிரதிபலன் முறையூடாக, சமுர்த்தி பயனாளிகளுக்கு பணம் வரவு வைக்கும் முன்னோடிக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது அணைத்து வங்கிகளுக்கும் பரவலாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலகத்தின் அணைத்தப் பிரிவுகளும் உள்ளடங்களாக மேற்கொள்ளப்பட்ட பிரதிபலன் கொடுப்பனவுப் பணம் மாவட்ட செயலகத்தினால் மீள் நிதியீட்டம் செய்வதற்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதன் பின் மாவட்ட செயலகத்தினால் பிரதேச செயலகப் பிரிவுகளின் அணைத்து பிரதிபலன் கொடுப்பனவுகளும் சமுர்த்தி சமூக பாதுபாப்பு நிதியத்தினால் நிதியீட்டம்

செய்யப்படல் வேண்டும். இவ்வாற வழங்கப்பட்ட முற்பணம் பற்றாக்குறையாயின், சமூகப் பாதுகாப்ப நிதியத்தினால் மேலதிக முற்பணக் கோறிக்கை முன்வைக்க முடியும்.

2.1.2.2.6. சமூக பாதுகாப்பு நிதியம் - செலவு மதிப்பீடு 2022

2022 செயற்பாட்டுத் திட்டத்துக்மைய அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு அளவு ரூபா.மிலியன் . 3,959.15, ஆகும்.

அட்டவணைக் குறிப்பு – (V)

விபரம்	பிரதான காரியாளம்	மாவட்ட செயலகம்	நிலாவெளி	பொதுவில்	එකතුව
மீண்டெலும் செலவுகள் (ரூ.மி.)	3,871.23	3.00	2.95	0.30	3,877.48
மூலதனச் செலவுகள் (ரூ.மி.)	1.37	76.00	4.30	-	81.67
கூட்டுத்தொகை (ரூ.மி.)	3,827.60	79.00	7.25	0.30	3,959.15

2.1.2.2.07 கருத்திட்டத்தின் முடிவு:-

2022.01.01 திகதியில் இருந்து 2022.12.31 வரை கோறிக்கை விடப்பட்ட பயனாளிகளுக்கு சுற்றறிக்கைகளுக்கு அமைய கொடுப்பனவு செய்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு நம்பிக்கை சபையின் அனுமதிக்கப்பட்ட பணிப்பாளர் சபை பத்திரிகைக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல். வருடத்தினுல் உள்ளக மற்றும் வெளியக தரப்பினரால் கோரப்படும் விடுதி வசதிகள், பயிற்சி நடவடிக்கைகள் விரிவுரைகள் போன்றவற்றிற்கு நிலாவெளி சமுர்த்தி பயிற்சி நிலையத்தினால் குறிப்பிட்ட வசதிகளை வழங்கள். இந்த வருடம் காலவதியாகும் முதலீடுகளை கூடிய வட்டி வீதத்தின் கீழ் அரச வங்கிகளில் மீள் முதலீடு செய்யப்படுகின்றது.

2.1.2.2.08 பெற்றுக் கொள்ளப்பட்ட சமூக பொருளாதார பெறுபேறு:-

- பயனாளிகளின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடையும் சந்தர்ப்பங்களில் நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குவதன் மூலம் அவர்களின் குடும்பங்களைப் பாதுகாத்தல்.
- க.பொ.த.(சா.த) சித்தியடைந்த க.பொ.த.(உ.த.) கற்பதற்கு தகுதியுடைய சமுர்த்தி பயனாளி பிள்ளைகளின் இரண்டாம் நிலைக் கல்வி தடைப்பட விடாமல் வெற்றிகரமான உயர் கல்விக்கான ஊக்கவிப்பு வழங்கள்.
- பிறப்பு மற்றும் இரட்டைப் பிள்ளைப் பேறு மற்றும் நோய்க்கான நிதிரீதியான பிரதிபலன் கொடுப்பதன் மூலம் போசன மட்டத்தினை உயர்வடையச் செய்து சுகாதாரத்துடன் கூடிய சமூக பாதுகாப்பு சூழல் ஒன்றிற்கான பங்களிப்பு செய்தல்.
- சமுர்த்தி பயனாளிகளுக்கான பிரதான சமூகப் பாதுகாப்பு வலைப்பின்னலின் பொருட்ட பங்களிப்பு செய்வதன் மூலம் மக்கள் வறுமை விகிதாசாரம் குறைவதற்கு காரணமாக அமைந்துள்ளது.
- கூடிய வட்டிவீதத் தின் கீழ் முதலீடு செயவதன் ஊடாக நிதியத்தின் நிதி நிலமையினை நல்ல மட்டத்தில் பேணுதல்.

2.1.2.2.09 நிதியத்தினுடாக தற்போது மேற்கொள்ளப்படுகின்ற கருமங்கள்-

சமூகப் பாதகாப்பு பிரதிபலன் கொடுப்பனவு.

- பிறப்புக்கான கொடுப்பனவு
  சமுர்த்தி பயனாளி குடும்பங்களுக்கு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் பிள்ளைப்பேறுகளுக்கு ரூபா. 10,000/=வழங்கள்.

மேலே ரூபா. 10,000/= க்கு மேலதிகமாக இரட்டைப் பிள்ளைப்பேற்றுக்கு பின்வருமாறு கொடுப்பனவு வழங்கள்.

இரண்டு பிள்ளைகளுக்கு மாதாந்தம் ரூபா 5,000/= வீதம் ஒரு வருடத்துக்கு.
மூன்று பிள்ளைகளை விட கூட உள்ள சந்தர்ப்பத்தில் மாதாந்தம் ரூபா. 10,000/= வீதம் ஒரு வருடத்துக்கு

- திருமணக் கொடுப்பனவு
  சமுர்த்தி பயனுகரி குடும்பங்களின் பயனாளிகளின் மற்றும் பிள்ளைகளின் திருமணங்கள் 02 க்கு ரூபா. 10,000/= வழங்கப்படும்.
- வைத்தியசாலை அனுமதியின் போது
  கொடுப்பனவானது, சமுர்த்தி பயனாளி குடும்பங்களின் பயனாளி அல்லது துணையாளி மற்றும் குடும்பத்தின் திருமனமாகாத பிள்ளைகளை வைத்தியசாலையில் அனுமதித்தால் ஒரு நாளைக்கு ரூபா .350/= வீதம் ஒருவருடத்தில் 30 நாட்களுக்கு ரூபா. 10,500/= பிரதிபலன் வழங்கப்படும்.

- இறப்பிற்கான கொடுப்பனவு
  சமுர்த்தி பயனாளி குடும்பங்களில் இறப்பு ஏற்படும் போது ரூபா. 20,000/= வழங்கப்படும்.

- சிப்தொர புலமைப் பரிசில்
  சமுர்த்தி குடும்பங்களில் க.பொ.த.(உ.த.) பயிலும் பிள்ளைகளுக்கு சிப்தொர புலமைப் பரிசில் வேலைத்திட்டம் செயற்படுத்துதல்.

முழு இலங்கையிலும் பரந்து இருக்கின்ற பயனாளிக் குடும்பங்களில் க.பொ.த.(உ.த.) பயிலும் அணைத்து மாணவ மாணவிகளுக்கும் மாதத்துக்கு ரூபா1,500/= வீதம் இரு வருட கல்விக் காலத்துக்கு புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது.

- சமுர்த்தி சமூகப்பாதுகாப்பு நம்பிக்கை சபையினால் அனுமதி வழங்கப்படுகின்ற வேறு குறைந்த வருமானம் பெறுகின்றவர்ளை இலக்காகக் கொண்ட சுகாதாரப் பாதுகாப்பு மலசலகூடம் நிர்மாணித்தல் போன்ற சமூக அபிவிருத்தி கருத்திட்டங்கள் சந்தர்ப்பத்துக்கு அமைய செயற்படுத்தப்படும்.

2.1.2.2.10. நேரடி முறை(on line) ஊடாக சமூக பாதுகாப்பு பிரதிபலன் வழங்கள்

தற்போது முன்னோடி கருத்திட்டமாக 25 மாவட்டங்களுக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட 25 சமுர்த்தி வங்கிகளுக்கு சமூக பாதுகாப்பு பிரதி பலன் பிரதான காரியாலயத்தில் இருந்து நேரடி முறையில் (on line) பணம் வழங்கப்படுகின்றது. 2023 இரண்டாவது காலாண்டில், முழு வங்கி வலையமைப்பின் ஊடாக நேரடி முறைக்கு(on line) சமூக பாதுகாப்பு பிரதி பலன் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆதற்கான ஆரம்ப பயிற்சி நடவடிக்கைகள் தற்போது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு அணைத்து வங்கி வலையமைப்பின் ஊடபக நேரடி முறைக்கு பிரதி பலன் வழங்கள் ஆரம்பிப்பதன் ஊடாக மிகவம் குறுகிய காலத்துக்குள் விணைதிறனாக குறைந்த செலவில் குறிப்பிட்ட சமூக பாதுகாப்பு பிரதிபலன் இலக்கு சமுதாயத்துக்கு வழங்குவது அடிப்படை நோக்கமாகும்.

புள்ளிவிபர அட்டவணை - (IV)

சமூக பாதுகாப்பு நன்மைகளை செலுத்துதல2021.01.01

முதல் 2021.12.31 திகதி வரை

தொ. இல	மாவட்ட செயலகம	பிறப்பு		திருமணம்		நோய்		இறப்பு		புலமைப் பரிசு		இரட்டைக் குழந்தை பிறப்பு		மொத்தம்	
		அளவு	தொகை ரூ	அளவு	தொகை ரூ	அளவு	தொகை ரூ	அளவு	தொகை ரூ	அளவு	தொகை ரூ	அளவு	தொகை ரூ	அளவு	தொகை ரூ
1	கொழும்பு	124	1,240,000.00	993	9,930,000.00	2,222	8,887,150.00	1,990	39,800,000.00	20,612	30,918,000.00	13	65,000.00	25,954	90,840,150.00
2	கம்பஹா	604	6,040,000.00	2,721	27,210,000.00	9,735	41,416,550.00	4,325	86,500,000.00	56,661	84,991,500.00	12	70,000.00	74,058	246,228,050.00
3	களுத்தறை	235	2,350,000.00	1,258	12,580,000.00	2,923	10,978,450.00	2,898	57,960,000.00	31,912	47,868,000.00	45	225,000.00	39,271	131,961,450.00
4	கண்டி	514	5,140,000.00	2,106	21,060,000.00	5,123	19,893,350.00	3,703	74,060,000.00	59,344	89,016,000.00	125	625,000.00	70,915	209,794,350.00
5	மாத்தளை	416	4,160,000.00	1,008	10,080,000.00	2,602	9,950,644.00	1,660	33,200,000.00	23,918	35,877,000.00	56	280,000.00	29,660	93,547,644.00
6	நுவரஎழிய	369	3,690,000.00	837	8,370,000.00	1,776	7,508,750.00	1,769	35,380,000.00	25,054	37,581,000.00	43	215,000.00	29,848	92,744,750.00
7	காலி	394	3,940,000.00	1,669	16,690,000.00	3,592	13,366,050.00	2,830	56,600,000.00	51,972	77,958,000.00	58	290,000.00	60,515	168,844,050.00
8	மாதறை	488	4,880,000.00	1,697	16,970,000.00	3,950	14,986,350.00	2,705	54,100,000.00	49,930	74,895,000.00	33	165,000.00	58,803	165,996,350.00
9	ஹம்பந்தொட்டை	924	9,240,000.00	1,671	16,710,000.00	4,719	19,170,550.00	1,857	37,140,000.00	58,732	88,098,000.00	130	665,000.00	68,033	171,023,550.00
10	யாழ்ப்பாணம்	1,206	12,060,000.00	1,973	19,730,000.00	4,293	14,752,400.00	1,681	33,620,000.00	53,330	79,995,000.00	150	795,000.00	62,633	160,952,400.00
11	மன்னார்	504	5,040,000.00	860	8,600,000.00	1,812	4,319,500.00	474	9,480,000.00	17,270	25,905,000.00	23	115,000.00	20,943	53,459,500.00
12	வவுனியா	546	5,460,000.00	717	7,170,000.00	942	4,594,800.00	463	9,260,000.00	14,829	22,243,500.00	37	185,000.00	17,534	48,913,300.00
13	முல்லைத்தீவு	422	4,220,000.00	604	6,040,000.00	8,318	3,209,300.00	385	7,700,000.00	11,499	17,248,500.00	47	235,000.00	21,275	38,652,800.00
14	கிளிநொச்சி	379	3,790,000.00	674	6,740,000.00	9,550	5,561,150.00	490	9,800,000.00	20,347	30,520,500.00	6	30,000.00	31,446	56,441,650.00
15	மட்டக்களப்பு	1,560	15,600,000.00	3,266	32,660,000.00	4,386	17,295,200.00	2,205	44,100,000.00	62,750	94,125,000.00	224	1,120,000.00	74,391	204,900,200.00
16	அம்பாறை	1,589	15,890,000.00	2,815	28,150,000.00	7,380	26,198,892.16	2,136	42,720,000.00	72,293	108,439,500.00	115	575,000.00	86,328	221,973,392.16
17	திருயேகாணமலை	1,323	13,230,000.00	1,696	16,960,000.00	2,481	7,516,000.00	1,235	24,700,000.00	32,233	48,349,500.00	67	470,000.00	39,035	111,225,500.00
18	குருணாகல்	1,426	14,260,000.00	3,439	34,390,000.00	9,257	38,758,350.00	6,013	120,260,000.00	111,265	166,897,500.00	164	845,000.00	131,564	375,410,850.00
19	புத்தளம்	695	6,950,000.00	1,422	14,220,000.00	2,348	9,107,900.00	2,091	41,820,000.00	25,412	38,118,000.00	93	465,000.00	32,061	110,680,900.00
20	அனுராதபுரம்	698	6,980,000.00	1,342	13,420,000.00	2,629	10,915,000.00	1,896	37,920,000.00	32,822	49,233,450.00	97	477,670.00	39,484	118,946,120.00
21	பெலன்நறுவ	486	4,860,000.00	749	7,490,000.00	1,851	7,324,150.00	761	15,225,000.00	13,648	20,472,000.00	15	150,000.00	17,510	55,521,150.00
22	பதுள்ளை	652	6,520,000.00	1,586	15,860,000.00	4,051	14,923,100.00	2,246	44,920,000.00	43,861	65,791,500.00	62	544,000.00	52,458	148,558,600.00
23	மொணராகலை	593	5,935,000.00	1,449	14,490,000.00	3,642	14,530,300.00	1,370	27,400,000.00	39,191	58,786,500.00	126	630,000.00	46,371	121,771,800.00
24	இரத்தினபுரி	944	9,440,000.00	2,597	25,970,000.00	4,967	20,764,050.00	4,027	80,540,000.00	82,135	123,202,500.00	95	475,000.00	94,765	260,391,550.00
25	கேகாலை	242	2,420,000.00	1,323	13,230,000.00	3,145	14,147,900.00	3,055	61,100,000.00	46,705	70,057,500.00	21	105,000.00	54,491	161,060,400.00
	மொத்தம்	17,333	173,335,000.00	40,472	404,720,000.00	107,694	360,075,836.16	54,265	1,085,305,000	1,057,725	1,586,587,950	1,857	9,816,670.00	1,279,346	3,619,840,456.16

2.1.2.2.11 வாழ்வாதார அவசர நிதி உதவி வேலைத்திட்டம்..

நிகழ்காலத்தில் நாடடினுல் இடம் பெறுகின்ற பெருளாதார குழப்ப நிலை தாக்கத்துக்கு உள்ளான குறைந்த வருமானம் பெறுகின்ற மக்களுக்கு உதவி வழங்கும் நோக்கில் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளினுடாக வழங்கப்பட்ட கடனுதவியின் கீழ் 2022 ம் ஆண்டின் மே, ஜுன்,ஜுலை மற்றும் செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் ஆகிய 06 மாதங்களுக்கும் ரூபா 3.000.00 இருந்து ரூபா 5,000.00 வரை மாதாந்தக் கொடுப்பனவு, பின்வரும் பயனாளிக் குழுக்களுக்கு அவர்களுக்கான நித்திய கொடுப்பனவு மற்றம் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

01. சமுர்த்திப் பயனாளிகள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள பயனாளிகள்.

02. சிறுநீரக நோய்க்கான கொடுப்பனவு பெறுகின்ற நபர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள பயனாளிகள்.

03. முதியோர் கொடுப்பனவு பெறுகின்ற நபர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள பயனாளிகள்.

04. ஆங்கவீனர் கொடுப்பனவு பெறுகின்றவர்கள் மற்றும் காத்திருப்போர் பட்டியலில் உள்ள பயனாளிகள்.

இதற்கு மேலதிகமாக 2022 ம் ஆண்டின் ஆகஸ்ட் மற்றும் டிசம்பர் ஆகிய அரண்டு மாதங்களுக்கும் நேரடி திறைசேரி நிதி ஒதுக்கீட்டினால் மேற்குறித்த பயனாளிக் குழுக்களுக்கு மேலதிக நிதி உதவி வழங்கப்பட்டது.

உலக வங்கி உதவி (World Bank) யின் கீழ் அவசர நிதி உதவி வழங்கும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் - 2022

அட்டவணைக் குறிப்பு - (VII)

குடும்ப குழு		அறிந்து கொண்ட குடும்ப எண்ணிக்கை	நிதி உதவி வழங்குகின்ற குடும்ப எண்ணிக்கை	வழங்கிய தொகை (ரூ.மில்..)
1	சமுர்த்தி நித்திய மானிய உதவி பெறுகின்ற குடும்பங்கள்	1,689,461	1,689,461	10,778.29
2	சமுர்த்தி TOP Up பெறுகின்ற குடும்பங்கள்	1,689,461	1,689,461	15,544.30
3	சமுர்த்தி காத்திருப்போர் பட்டியலில குடும்பங்கள்	731,975	726,449	10,512.00
4	முதியோர் காத்திருப்போர் பட்டியலில குடும்பங்கள்	131,152	131,152	1,427.87
5	வலது குள்றிய காத்திருப்போர் பட்டியலில குடும்பங்கள்	25,072	25,072	232.03
6	சிறநீரக நோய் காத்திருப்போர் பட்டியலில குடும்பங்கள்	3,232	3,232	28.79
மொத்தம்		**2,580,892**	**2,575,366**	**39,619.31**

ஒதுக்கீட்டின் வகை	ஒதுக்கீடு		நித்திய செலவு (ரூ.மி.)	பயன்படுத்திய ஒதுக்கீடு,முடித்த ஒதுக்கீட்டு அளவு, % ஆக
	ஆரம்ப ஒதுக்கீடு (ரூ.மி.)	இறுதி ஒதுக்கீடு (ரூ.மி.)		
மீண்டெழும்	83,203,600	83,203,600	53,921,970	65
மூலதன	164,700	164,700	99,548	60

3.8.நி.பி.208 அமைய வேறு அமைச்ச / திணைக்களப் பிரதி நிதி ஒருவராக இந்தத் திணைக்களத்துக்கு / மாவட்ட செயலகத்துக்கு/ மாகான சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடு

புள்ளிவிபர அட்டவணை - (XXVI)

தொ.இல.	ஒதுக்கீடு பெற்றுக் கொண்ட அமைச்சு /திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம்	நிதி ஒதுக்கீடு		உண்மைச் செலவு ரூ.மி	பயன்படுத்திய ஒதுக்கீடுகள் முடிக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டளவின் % மாக
			ஆரம்ப நிதி ஒதுக்கீடு (ரூ.மி)	இறுதி நிதி ஒதுக்கீடு (ரூ.மி)		
01	ஆரச நிர்வாக மற்றும் உள்நட்ட அலுவல்கள் அமைச்ச	பட்டதாரி பயிலுனர்களுக்கான சம்பளம் கொடுப்பனவு	798,537	798,537	761,210	95
02	தேசிய திட்டமிடல் திணைக்களம்	மேல் தாக்கத்துக்கஉள்ளான குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்கள் உலக வங்கி வேலைத்திட்டம்.	632,020	632,020	632,020	100
03	ஓய்வூதியத் திணைக்களம்	முற்பண பீ கணக்கின் கீழ் கடன் தீர்த்தல்.	.2	.260	.260	100
04	பகுகார்ய அபிவிருத்தித் திணைக்களம்	மாத்தறை பயிற்சி நிலயத்தின் மின்சாரச் செலவு	0.10	0.10	0.10	100

3.9. நிதியற்ற சொத்துக்களை அறிக்கையிடலின் செயலாற்றுகை

புள்ளிவிபர அட்டவணை - (XXVII)

சொத்துக் குறியீடு	குறியீட்டு விபரம்	2022.12.31க்கு பொருள் மெய்யாய்வு அறிக்கைக்கு அமைய மீதி	2022.12.31க்கு பொருள் நிதி நிலைமை அறிக்கைக்கு அமைய மீதி	ஏதிர்காலத்தில் கணக்க வைக்க உள்ள	முன்னேற்றம் % மாக அறிக்கையிடல்
9151	கட்டிடங்கள் மற்றும் அமைப்பு	346,958	346,958	-	100
9152	இயந்திர உபகர்ணங்கள்	858,295	858,295	-	100
9153	காணி	453,084	453,084	23,336	100
9154	அஸ்புரூஸ்ய சொத்து	-	-	-	-
9155	ஊயிரியல் விஞ்ஞான சொத்துக்கள்	-	-	-	-
9160	மேற்கொள்ளப் படுகின்ற வேலைகள்	21651	21651	-	100
9180	ஈடு லைக்கப்பட்ட சொத்துக்கள்	-	-	-	-

3.10 கணக்காய்வுத் தலைமையதிபதியின் அறிக்கை

எல்எஸ்டபிள்யூ/ஏ/எஸ்டீடீ/21/22/எப்எஸ் 2023 மே 31

கணக்கீட்டு அலுவலர்
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

தலைப்பு 331- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்க அறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 331- சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் கமத்தொழில் அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையைத் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில்

மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகள் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு அலுவலகர் மற்றும் கணக்கீட்டு அலுவலகரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் முன்னளிக்கப்படும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பது பிரதான கணக்கீட்டு அலுவலகரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றினை உருவாக்கிப் பேணிச் செல்லப்படுவதாகப் பிரதான கணக்கீட்டு அலுவலகர் மற்றும் கணக்கீட்டு அலுவலகர் உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன் அத்தொகுதியின் பயனுறுதித்தன்மை தொடர்பாக காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க தொகுதியை பயனுறுதிமிக்கதாக நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களையும் மேற்கொள்ள வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப்

பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைத் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் உசிதமான மற்றும் நியாயமான முறையில் உள்ளடக்கப்பட்டுள்ளது என,

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு அலுவலகருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகளுக்கான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் சென்ற ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 நிதியல்லாச் சொத்துக்கள்

(அ) 2022 சனவரி 01 இல் ரூபா 900,000 பெறுமதியான கலகம சமுர்த்தி வங்கி காணி ரூபா 2,500,000 இற்கு மதிப்பிடப்பட்டதன் மூலம் சேர்க்கப்பட்ட ரூபா 1,600,000 ஆன பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் ஒதுக்கங்களின் கீழ் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) ரூபா 5,650,000 பெறுமதியான ஹிபன்கந்த கல்கந்த காணி சுகாதார நிலையத்திற்காக கரன்தெனிய பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் காணிகளின் கீழ் தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) மாத்தறை உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணியின் பெறுமதி ரூபா 7,749,000 உத்தியோகபூர்வ இல்லங்களின் கீழ் குறிப்பிடப்படாததுடன் ரூபா 3,751,000 ஆன கட்டிடம் மட்டுமே உத்தியோகபூர்வ இல்லங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஈ) செலவு விடய இலக்கம் 1205 இன் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 115,000 ஆன மின்சார உபகரணங்களின் (Microwave Oven) பெறுமதி ரூபா 1,150,000 ஆக மின்சார உபகரணங்களின் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ) உறுதிச்சீட்டு இலக்கம் 12/390 மூலம், வீடியோ மற்றும் கேமரா உதிரிப்பாகங்கள் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 1,149,000 செலுத்தும் போது, 15 சதவீத பெறுமதி சேர்க்கப்பட்ட வரித் தொகையான ரூபா 172,350 செலுத்தப்பட்டிருந்தும் அது சொத்தக்களில் சேர்க்கப்பட்டு காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 879,330 ஆன கேமரா உதிரிப்பாகங்கள் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியில் சேர்க்கப்பட்டு காட்டப்பட்டிருக்கவில்லை.

1.6.2 வைப்புக்கணக்கு மீதிகள்

(அ) 5 பொது வைப்புக் கணக்குகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் அட்டவணைகளின் பிரகாரம் மீதிகள் என்பவற்றுக்கிடையே ரூபா 124,709,327 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) பொது வைப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட 05 பொருட்களின் மொத்த பெறுமதி ரூபா 2,392,568,462 ஆனது தனிப்பட்ட மீதிகள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

1.6.3 இழப்புக்கள் மற்றும் நட்டங்கள்

(அ) 2022 ஆம் ஆண்டில் விபத்தில் சிக்கிய ரூபா 64,850 செலவிடப்பட்டு பழுதுபார்க்கப்பட்ட 02 வாகனங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (i) இல் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2020 ஆம் ஆண்டில், விபத்தில் சிக்கி காப்பீட்டு இழப்பீடு பெறப்பட்ட 9 வாகனங்கள் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டில், புத்தகத்தில் இருந்து நீக்கப்பட்டதாக பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த வாகனங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்கள் 104, 109 மற்றும் நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்படாததடன் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு (i) இன் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 செலவு முகாமைத்துவம்

இரண்டு செலவின விடயங்களின் மொத்த தேறிய ஒதுக்கீட்டில் 12 சதவீதம் முதல் 64 சதவீதம் வரையான அளவு சேமிப்பு செய்யப்பட்டிருந்தது. சேமிப்புக்கான காரணங்களாக அரசாங்க செலவின முகாமைத்துவக் கொள்கைகளில் மூலதனச் செலவினம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இந்தச் செலவின விடயங்களுக்காக பயிற்சித் திட்டங்களுக்கான செலவுகளின் கீழ் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதே சேமிப்பிற்கான காரணமாக இருந்தது.

2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

(அ) செலவின விடய இலக்கம் 331-1-1-1202 மற்றும் 331-2-2-1402 இன் கீழ் ஏனைய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 947,730 ஆனது பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 3,045,956 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி செலவுப் பேரேட்டில் முன்னைய ஆண்டு கணக்கிடப்பட்ட கடப்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு முரணாக, திணைக்கள அதிகாரிகளுக்கு செலுத்த வேண்டிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 125,521 பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

2.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழுள்ள விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல் செய்ய வேண்டி இருந்தபோதிலும் அதன்படி செய்யப்பட்டிருக்கவில்லை.

(அ) திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை பயன்தரும் வகையில் கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய போதிலும், அம்மீளாய்வுகள் எழுத்து மூலமாக செய்யப்பட்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவைப்படும் குறிப்பிட்ட காலத்திற்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதிலளிக்கப்படுமென பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டிய போதிலும் அறிக்கையின் 3.10 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமை.
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை	

(i)	நிதிப் பிரமாணம் 135 மற்றும் 381(i)	பயிற்சி நிலையங்களின் சகல பணிகளும் நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படாது இணைக்கப்பட்டுள்ள பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், 03 பயிற்சி நிலையங்கள் திறைசேரியின் அங்கீகாரமின்றி வங்கி நடைமுறைக் கணக்குகளைப் பேணி வருகின்றன.
(ii)	நிதிப் பிரமாணம் 206(3) மற்றும் (1)	வைப்பொன்றின் மூலம் பணம் செலுத்தும்போது, ஒவ்வொரு உறுதிச்சீட்டும் இரண்டு அதிகாரிகளால் சான்றுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2022 நவம்பர், திசெம்பர் மாதங்களுக்காக ரூபா 1,388,691,509 மதிப்புள்ள 50 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் (கோரிக்கை ஆவணங்கள்) ஒரு அதிகாரியால் சான்றுப்படுத்தப்பட்டிருந்தன. பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் 206(1) ஆம் பந்தியின் தேவையிலிருந்து விலக்களித்தல் மற்றும் அவ்வாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.
(iii)	நிதிப் பிரமாணம் 395(ஆ)	ஒவ்வொரு மாதத்தின் முடிவிலும் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் நிலை குறித்து, அடுத்து வரும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் வங்கி இணக்க கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தில் 2022 ஆம் ஆண்டின் 10 மாதங்களுக்கான வங்கி இணக்க கூற்றுக்கள் 04 நாட்கள் முதல் 40 நாட்கள் வரையான கால தாமதத்தடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.
(iv)	நிதிப் பிரமாணம் 396	ஊழியர் கடன் சுழற்சி வங்கி கணக்கு கூற்றுக்களில், வழங்கப்பட்டும் ஆனால் சமர்ப்பிக்கப்படாத ரூபா 180,100 ஆன காசோலை தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
(ஆ)	2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை	2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வாகனக் கணக்கெடுப்பின் பிரகாரம் சேவையில் இருந்து நீக்கப்பட்ட, பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படக் கூடிய 24 வாகனங்களை பழுதுபாாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.
(இ)	2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை	சுற்றறிக்கை பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படாததுடன், ஒட்டுமொத்த பதவியணிக்கான பதவியணி ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 7.4 ஆம் பந்தி மற்றும் 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை	ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு வகை வைப்புக் கணக்கு தொகுதிகளுக்கான ஆண்டிறுதி நிலுவைகள், சிகாஸ் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தனிப்பட்ட நிலுவைகளின் பட்டியலுடன் இணக்கப்பட்டு வைப்புக் கணக்கு நடவடிக்கைகளைப் பின்தொடரவும் பகுப்பாய்வு செய்வதற்கும் படிவங்கள் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு நிதியாண்டின் முடிவில் அடுதது வரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

2.5 வைப்புகள்

(அ) 2013 ஓகஸ்ட், செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் ஆகிய மாதங்களில் மானியம் வழங்குவதற்காக முன்னாள் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் சமுர்த்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 2,374 மில்லியன் ஆன தொகையானது 8 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தீரக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2014 யூன் 01 முதல் 2022 திசெம்பர் 30 வரையான காலப்பகுதிக்கான மொத்தம் ரூபா 3,221,847 ஆன அரச ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத் தொகை அந்நிதியத்திற்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது காலி மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தின் வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) உலக வங்கி உதவியின் கீழ் 2022 மே, ஜூன், ஜூலை மாதங்களில் சமுர்த்தி/முதியோர்/ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான காத்திருப்புப் பட்டியல் பயனாளிகளுக்குப் பணம் செலுத்துவதற்காக சமுர்த்தி வங்கிக்கு 2022 மே - ஆகஸ்ட் காலப்பகுதியில் செலவு வைக்கப்பட்டுள்ள ரூபா 39,619,307,119 ஆன தொகையில் மானியம் செலுத்திய பிறகு, மீதமுள்ள ரூபா 90,318,300 ஆன தொகை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு 2023 ஏப்ரல் 11 அன்று திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

(ஈ) 2020/21 ஆம் ஆண்டுகளில் கோவிட் மானியங்களை வழங்குவதற்காக, திணைக்களத்தின் கீழ் உள்ள நிதியங்களின் நிலையான வைப்புக்கள் பிணையாக வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன் பணம் சமுர்த்தி சமூக வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது. பயனாளிகளுக்கு மானியம் செலுத்திய பிறகு மீதமுள்ள ரூபா 177,731,499 ஆன தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் தேதி வரை நிதியத்திற்கு விடுவிக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் சேமிக்கப்பட்டிருந்தது.

(உ) 2019 மே முதல் 2021 ஜூன் வரையிலான காலக்கட்டத்தில், வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத மொத்தம் ரூபா 654,589 ஆன 49 காசோலைகள் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் சேமிக்கப்பட்டிருந்தன.

2.6 தீர்ப்பனவு செய்யப்படாத நிலுவை

சமுர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்புக் கணக்குகளில் உள்ள பணம் மற்றும் பல்வேறு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டுள்ள திணைக்களத்தில் காணப்பட்ட நிதியக் கணக்குகளில் இருந்து அவற்றின் நோக்கங்களுக்கு முரணாக ரூபா 53,594.67 மில்லியன் அரசாங்கத்தின் பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இந்தத் தொகையில் ரூபா 53,294.97 மில்லியன் (வட்டியுடன்) இன்னும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது.

2.7 வங்கிக் கணக்கு செயற்பாடு

(அ) 2022 திசெம்பர் 31 இல் காணப்பட்ட மொத்தம் ரூபா 23,182,701 ஆன இனங்காணப்படாத பெறுவனவுகளில் மொத்தம் ரூபா 1,068,232 ஆன 04 காசோலைகள் 2023 மே 30 வரை இனங் காணப்பட்டு திருத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) ஊழியர் கடன் சுழற்சி கணக்கு தொடர்பான 2022 திசெம்பர் வங்கி இணக்கம் பரீட்சிக்கப்பட்டபோது 4 வருடங்கள் முதல் 8 வருடங்கள் வரையான காலப்பகுதியில் வைப்புச் செய்யப்பட்டு ஆனால் வசூலிக்கப்படாத ரூபா 2,668,654 மதிப்புள்ள 84 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

2.8 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு

(அ) 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகளின்படி, குறைந்தபட்ச பெறுவனவு எல்லை ரூபா 280,000,000 ஆக இருந்ததுடன் உண்மையாக பெறப்பட்ட தொகை ரூபா 222,888,467 ஆக இருந்தமையால் பெறுவனவுகளில் குறைந்தபட்ச எல்லை எட்டப்படாத பெறுமதி ரூபா 57,111,533 ஆக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) 2 ஆண்டுகளுக்கும் மேலான பழைய கடன் நிலுவைத் தொகையிலிருந்து 2021 ஆம் ஆண்டில், ரூபா 2,882,253 அறவிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டில் ரூபா 511,047 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது.

(ii) 6 அதிகாரிகளுக்கு ரூபா 250,000 வீதம் இடர்க் கடன்கள் வழங்கப்பட்டிருந்தும் தவணைகள் எதுவும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) அரச அதிகாரிகளின் முற்பணக் கணக்கில் கடன் நிலுவை அறவீடுகள் ஊழியர் கடன்கள் சுழற்சி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்றமை. எடுத்துக்காட்டு: மாத்தறை மாவட்ட அலுவலக அதிகாரி ஒருவரிடமிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகை ரூபா 210,652 கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட அட்டவணையில் காணப்பட்டதுடன் அறவீடு ஊழியர் கடன்கள் சுழற்சி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2022 திசெம்பர் 31 இல் 100 ஊழியர்களின் 01 முதல் 05 வருடத்திற்கு மேற்பட்ட கடன் நிலுவைத் தொகை ரூபா 2,467,073 ஆக இருந்தது. இந்தக் கடன் மீதியில், 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 302,233 உம் 4 மற்றும் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 922,180 உம் 3-4

ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடன் நிலுவைத் தொகை ரூபா 321,336 உம் 1-3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 921,324 உம் ஆகக் காணப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 தூர நோக்கும் செயற்பணியும்

(அ) வறுமையை ஒழிக்கும் அடிப்படை நோக்கத்துடன் குடும்ப அலகு அடிப்படையிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை பயன்படுத்துவதன் மூலம், வருமானம் மற்றும் சமூக நிலைமைகளை அதிகரிப்பதன் மூலம் வறுமையை ஒழிப்பதற்கும், இளைஞர் யுவதிகளை நாட்டின் அபிவிருத்தி செயன்முறை மற்றும் நிர்வாகத்திற்கு நேரடியாக பங்களிப்புச் செய்வதற்கும் சமுர்த்தி பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிகள் தொடர்பாக, அரசாங்கத்தினால் வருடாந்தம் பணம் செலவிடப்பட்டு சமுர்த்தி மானியங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் போன்ற பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2019 ஆம் வருடத்திலிருந்து 2022 ஆம் வருடம் வரையிலான காலப்பகுதியில் அரசினால் சமுர்த்தியாளர்களை வலுப்படுத்துவதற்கான பல்வேறு சமுர்த்தி அபிவிருத்தி திட்டங்களுக்கு ரூபா 1,260 மில்லியன் செலவிடப்பட்டிருந்தும் வலுப்படுத்துதல் தொடர்பான குறிப்பிட்ட இலக்குகள் எதுவும் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1995 ஆம் வருடத்தில் சமுர்த்தியாளர்களாக அடையாளம் காணப்பட்ட 312,307 பேர் 2023 ஆம் ஆண்டளவில் 29 ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும் வலுப்படுத்தப்படாமல் தொடர்ந்தும் மானியங்களைப் பெற்று வருகின்றனர்.

(இ) திணைக்களத்தினால் ஆண்டுதோறும் வலுப்படுத்தப்பட்டு வருகின்ற சமுர்த்தியாளர்களாக 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே 1,958, 18,629 மற்றும் 21,189 பயனாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆண்டுதோறும் வலுப்படுத்தப்படுகின்ற பயனாளிகள் தொடர்பாக குறிப்பிட்ட இலக்குகள் கொண்ட திட்டமொன்றுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன் பிரகாரம் ஆண்டுதோறும் சமுர்த்தியாளர்களை வலுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுடன் ஒப்பிடுகையில், வலுப்படுத்தப்படல் குறைந்தளவு மட்டத்தில் இருந்தது.

(ஈ) 2018 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய DSD/HO/SW/14/18/04/18 சுற்றறிக்கை மற்றும் 2021 பெப்ரவரி 11 ஆம் திகதிய DSD/HO/SW/14/19/01 - Circular ஆகிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் சமுர்த்தி மானியங்களுக்கத் தகுதியற்ற திறமையான தொழிலாளர் மற்றும் சிற்பிகள் போன்ற அறிவைப் பயன்படுத்தி வருமானம் ஈட்டும் செயற்திட்டங்களில் ஈடுபட்டுள்ள பயனாளிகளின் சமுர்த்தி மானியங்கள் கிராமப்புற குழுக்களின் பரிந்துரைகளின் பேரில் அகற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனைக்கு எடுக்கப்பட்ட 34 வட்டாரச் செயலகப் பிரிவுகளில் உள்ள 1,112 பயனாளிகளின் சமுர்த்தி மானியம் அகற்றப்படுவதற்கு கிராமக் குழுக்களிடமிருந்து பரிந்துரைகள் எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2022 திசெம்பர் 31 இல் 1,089 சமூக அடிப்படையிலான வங்கிகளில் 4,115,100 உறுப்பினர்களின் மொத்த வைப்புத் தொகை ரூபா 155.1 பில்லியன் ஆக இருந்ததுடன் அதில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் காணப்பட்ட நிலுவை ரூபா 68 பில்லியன் மட்டுமே ஆகும். 2022 திசெம்பர் 31 இல் ரூபா 149 பில்லியன் அதிக வட்டி விகிதத்தில் முதலீடு செய்யப்பட்டதுடன் சமுர்த்தியாளர்களின்

சேமிப்புக்காக 3 சதவீதமான குறைந்த அளவிலான வட்டியே வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் சமூர்த்தியாளர்களை வலுவூட்டும் நோக்கில் சமூக அடிப்படையிலான வங்கி முறையானது ஆரம்பிக்கப்பட்ட போதிலும், தற்காலத்தில் அது சமூர்த்தியாளர்களை வலுவூட்டும் நோக்கத்தில் இருந்து விலகி இலாபத்தை நோக்கியே இயங்கி வருவதையும் மற்றும் இலாபத்தை நோக்கிய செயற்பாடுகளைக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

(ஊ) சமூக அடிப்படையிலான வங்கிகளுக்கு மாதாந்தம் அனுப்பப்படுகின்ற சமூர்த்தியாளர்களின் மானியப் பணம் சில சமூர்த்தியாளர்களினால் மாதாந்தம் பெறப்படாமல் நீண்ட காலமாக அவர்களது வங்கிக் கணக்குகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக நடாத்தப்பட்ட மாதிரி கணக்காய்வின் போது, 10 சமூக அடிப்படையிலான வங்கிகள் 41 பிரிவுகளில் 2,433 பயனாளிகளின் சேமிப்புக் கணக்குகளில் சேமிக்கப்பட்ட தொகை ரூபா 59,951,537 (ரூபா 10,000க்கு மேற்பட்ட மீதி) ஆக இருந்தது.

3.2 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

(அ) சமூர்த்தி மின் சந்தைப்படுத்தல் வலையமைப்பை நிறுவுவதற்கும் சமூர்த்தி உற்பத்திகளுக்கான தரச் சான்றிதழ்களை வழங்குவதற்கும் 5 வேலைத்திட்டங்கள் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டும் ஆனால் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(ஆ) கரிம உர உற்பத்தி தொடர்பாக 15 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு 6 நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் பௌதீக முன்னேற்றம் 40 சதவீதமாக இருந்தது.

(இ) திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு வேலைத்திட்டங்களின் கீழ் 02 பட்டறைகள்(Workshop) நடாத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அந்த வேலைத்திட்டங்கள் நடாத்தப்படவில்லை.

(ஈ) நுண் நிதி வேலைத்திட்டத்தின் கீழ் 25 புதிய சமூர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 7 மில்லியன் ஒதுக்கப்பட்டது. அதில் ரூபா 4.90 மில்லியன், அதாவது ஒதுக்கப்பட்ட தொகையில் 70 சதவீதமான செலவில் 6 புதிய வங்கிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட நிலையில், 09 வங்கிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் 50 சதவீதம் மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

3.3 செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் நலிவுகள்

(அ) 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவின் கீரகல சமூர்த்தி மாதிரிக் கிராமத்தின் 72 பயனாளிகளுக்கு 11 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,970,000 மற்றும் ஓபநாயக்க பிரதேச செயலகப் பிரிவின் மல்மிகந்த சமூர்த்தி மாதிரிக் கிராமத்தில் கித்துல் உற்பத்திகளுக்காக 255 பயனாளிகளுக்கு ரூபா 5,824,451 அரச பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தும் இந்த செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டு 4 ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும் வருமான உருவாக்கம் பற்றிய தகவல்களைப் பெற்று வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பான பின்தொடரலொன்று மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) கம்பஹா மாவட்டத்தின் 13 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த சமூர்த்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்,உற்பத்தி கிராமங்களை

உருவாக்குவதன் மூலம் சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதற்காக, 2016 ஆம் வருடம் முதல் 2020 ஆம் வருடம வரை , கம்பஹா மாவட்டத்தில் 11 மாதிரிக் கிராமங்களுக்காக திணைக்களத்தினால் ரூபா 38,442,329 ஆன தொகை செலவிடப்பட்டது.கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 06 மாதிரிக் கிராமங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு 2020 ஆம் ஆண்டளவில் 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும், செயற்திட்டங்களுக்கான பின்தொடரல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) 2017ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை குருநாகல் மாவட்டத்தின் 30 பிரதேச செயலகப் பிரிவுகளில் கைத்தொழில், சந்தைப்படுத்தல், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 7986 பயனாளிகள் சார்பாக ரூபா 293,281,808 செலவிடப்பட்டுள்ளது. மாதிரி பரிசோதனையில் தெரிவு செய்யப்பட்ட 10 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம அலுவலர் பிரிவுகளில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட உள்ளீட்டு சாதனங்களை செயற்படுத்தி பெறப்படும் வாழ்வாதார வருமானம் உருவாக்கும் செயற்திட்டங்களில் ஒரே பயனாளிக்கு இரண்டு தடவை வருமானம் ஈட்டும் சாதனங்கள் வழங்கப்பட்டு மற்றும் , பயனாளியின் தொழில் சரியாக அடையாளம் காணப்படாமல் பொருட்கள் சாதனங்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அத்துடன், உபகரணங்களை வழங்கும்போது பயனாளி புதிய திட்டத்துக்கான உபகரணங்களை பெறுகின்றாரா அல்லது பழைய திட்டத்துக்கான உபகரணங்களைப் பெறுகின்றாரா என்பது தொடர்பில் பின்தொடரலொன்று மேற்கொள்ளப்படவில்லை.

3.4 சிற்றுண்டிச்சாலை நிர்மாணித்தல்

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 4 சிற்றுண்டிச்சாலைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 19,748,110 செலவிடப்படடிருந்ததுடன் 2023 மார்ச் வரையில் அந்தக் கடைகள் திறக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. ஹபராதுவ, மத்துகம மற்றும் கிளிநொச்சி சிற்றுண்டிச்சாலைகளுக்காக மேலும் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை ரூபா 19.55 மில்லியன் ஆக மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் இதற்கான ஒதுக்கீடு 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவில்லை. இதன பிரகாரம் விற்பனை நிலையங்களின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 2 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பணிகள் நிறைவடையாததால் இந்த விற்பனை நிலையங்கள் விளைவற்று காணப்பட்டமை மற்றும் சமுர்த்தி பயனாளிகளை சிற்றுண்டிச்சாலைகளுக்கு அனுப்பி வருமானம் ஈட்டுவதன் மூலம் வலுவூட்டலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை போதிய அளவில் இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

3.5 நிதி முறைகேடுகள்

சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களில் 2014-2018 காலப்பகுதியில் ஏற்பட்ட ரூபா 115,723,619 பெறுமதியான 135 மோசடிகள் தொடர்பாக 2018 மற்றும் 2019 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டக்காட்டப்பட்டிருந்தன. 2023 ஏப்ரல் 21 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின்படி 2014-2018 காலப்பகுதிக்கான 15 மோசடிகளுக்காக ரூபா 63,817,207 உம் 2019 முதல் 2023 பெப்ரவரி வரையில் 92 மோசடிகளுக்காக ரூபா 172,189,227 உம் அடையாளம் காணப்பட்டிருந்தன. அனைத்து சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் கணனிமயமாக்கப்பட்ட செயல்முறைக்கு உட்படுத்தப்பட்டதால் வாடிக்கையாளர்களின் பணிகள் திறம்படச் செய்யப்படுவதுடன் அத்துடன் கைமுறை (Manual) மூலம் செய்யப்படும்போது வேண்டுமென்றே செய்யப்படும் தவறுகள் மற்றும் நிதி மோசடிகளைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அறிக்கையிடப்பட்ட நிதி மோசடிகள் மற்றும் முறைகேடுகள் கணிசமான அளவொன்றாக இருந்தது.

3.6 முகாமைத்துவ நலிவுகள்

3.6.1 தரவு அமைப்பை பராமரித்தல்

(அ) பயனாளிகள் முகாமைத்துவ மொடியூல்

2012 ஆம் ஆண்டில், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தினால் உருவாக்கப்பட்ட சமுர்த்தியாளர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களின் தகவல்களை உள்ளடக்கிய முகாமைத்துவ தொகுதி தொடர்பான தரவு அமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான e-சமுர்த்தி திட்டத்திற்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 4.3 மில்லியன் செலவிடப்பட்டதுடன் , 2019 ஆம் ஆண்டில் மீண்டும் CRM தொகுதிக்காக ரூபா 4.07 மில்லியன் செலவிடப்பட்டது. ஆனால் 2023 ஆம் ஆண்டு வரையில் பின்வரும் துணைத் தொகுதி தகவல்களைச் சேர்ப்பதன் மூலம் அமைப்பு நாளதுவரையாக்கப்படவில்லை.

- நீர் மற்றும் மின்சார பாவனை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை.
- கோவிட்-19 மானியங்களை வழங்குவது தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை.
- வாழ்வாதாரத் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் செயல்படுத்தல் நிலை மற்றும் பயனாளிகளின் வலுப்படுத்தல் முறைமைகள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை.
- அமைப்பு நாளதுவரையாக்கப்படாமையால், 2018 முதல் 2021 அக்டோபர் வரை 309 பயனாளிகளின் சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் பரிசுத் தொகையான ரூபா 61.8 மில்லியன் ஆன தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
- முதியவர்கள், ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரகப் பயனாளிகளின் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை.
- மாதாந்த மானியப் பணத்தை பிரதேசச் செயலகங்களுக்கு அனுப்பும் போது சரியான தரவுகள் பெறப்படாமையால் மானியப் பணம் அதிகமாக அனுப்பப்பட்டிருந்தமை.

(ஆ) மனித வள முகாமைத்துவ மொடியூல்

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் மனித வள செயற்பாடுகளை வினைத்திறனாக்கும் நோக்கில் மனித வள முகாமைத்துவ தொகுதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையின் திகதி வரையில் 25,235 திணைக்கள ஊழியர்களில் 97 சதவீதமானவர்களின் அடிப்படை தகவல்களை மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது. கல்விச் சான்றிதழ் உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை ஸ்கேன் செய்து 306 தனிப்பட்ட கோப்புகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2021 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த அமைப்பின் செயல்பாடு 2023 வரையில் இன்னும் ஆரம்ப நிலையிலேயே காணப்பட்டது.

(இ) சமூக அடிப்படையிலான வங்கி கணனி அமைப்பு

சமுர்த்தி அடிப்படையிலான வங்கியானது வினைத்திறனான பரிவர்த்தனைகளுக்காக Soft Watch மற்றும் SLTS ஆகிய இரண்டு மென்பொருட்களை அறிமுகப்படுத்தியிருந்தது. சமுர்த்தி வங்கியின் 1026 கிளைகள் இந்த மென்பொருளைப் பயன்படுத்தி வருவதுடன் தலைமை அலுவலகத்துடன் ஒருங்கிணைக்கப்படாத 12 கிளைகள் 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைய மென்பொருளைக் கொண்டு இயங்குகின்றன. அமைப்பின் செயல்பாடு குறித்து, 9

சமூக அடிப்படையிலான வங்கிகளில் நடாத்தப்பட்ட மாதிரி பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

ஒரு நாளைக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பணப்பரிமாற்றங்களை மட்டுமே செயற்படுத்த முடியுமென்பதால் அமைப்பு மந்தகதியில் இயங்குதல்,கடன் வசூலிப்பதில் முறைமையொன்று இல்லாமை, கணக்கு நிலுவைகள் சரியாக இல்லாமை , முன்னைய பரிவர்த்தனைகளைச் சரிபார்க்க முடியாமை, கணனி அமைப்பு அவ்வப்போது செயலிழக்கின்றமை, வங்கியின் முக்கிய தரவுகளை அணுகும்திறன் மென்பொருள் நிறுவனத்திற்கு உள்ளமை போன்ற காரணங்களினால் தரவுகள் மாற்றமடைவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை மற்றும் கணனி அமைப்பின் மூலம் சமூர்த்தியாளர்களின் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ள பணத்திலிருந்து தானாக கடன்களை வசூலிக்க கணனி அமைபபில் வசதிகள் செய்யப்பட்டிருப்பதன் காரணமாக 05 சமூக வங்கிகளைச் சேர்ந்த 173 மானியப் பயனாளிகளின் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டுள்ள ரூபா 3,857,777 ஆன மானியப்பணம் கடன் தவணையாக வசூலிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் மாதிரி பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது.

3.6.2 திணைக்களத்திற்குச் சொந்தமான நிதியங்கள்

(அ) 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 36 வது பிரிவின் கீழ் திவிநெகும அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் மற்றும் திணைக்களத்திற்கு கிடைக்கின்ற அனைத்து மானியங்கள், பரிசுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் பரிசுகள் மற்றும் பிற பங்களிப்புத் தொகை, வங்கிகளின் இலாபத்தில் இருந்து அமைச்சரால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையின் சதவீதமாக அனைத்து பெறுவனவுகளும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். அதன் பின்னர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் திவிநெகும அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திவிநெகும அபிவிருத்தி நிதியம் இது வரை ஸ்தாபிக்கப்படவில்லை.

(ஆ) மேற்படி சட்டத்தின் 45 ஆவது பிரிவின்படி, திணைக்களத்தினால் 6 நிதியங்கள் பராமரிக்கப்பட்டு வருவதுடன் சமுர்த்தி நிதியம் மற்றும் ஊழியர் கடன் சுழற்சி நிதியம் என்பன தற்போது செயலற்றுக் காணப்பட்டன.

(இ) 2020 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 2020/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.2 (ஆ) பந்தியின் படி, தற்போதுள்ள நிதியங்களின் செயல்பாடு தேசிய நலனுக்காக இருப்பதாகத் தோன்றினால், அந்த நிதியங்கள் பாராளுமன்றச் சட்டமொன்றினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் சமுர்த்தி தேசிய சமூக நிதியம் பாராளுமன்றச் சட்டமொன்றினால் அங்கீகரிக்கப்படாது செயற்படுத்தப்படுகின்றது.

(ஈ) மேற்படி நிதியத்தின் சட்ட நிலைமை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் நிதியத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2023 மே 22 அன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. சமூகத்தில் சமூக நீதியை அடைவதற்காக நிறுவப்பட்ட இந்த நிதியத்தின் மூலம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ரூபா 8,481,773 ஆன 03 செயற்திட்டங்கள் மட்டுமே செயற்படுத்தப்பட்டிருந்தன. 2022 திசெம்பர் 31 இல் ரூபா 8,048,684 ஆன மீதியொன்று நிதியத்தில் இருந்தது. 2022 திசெம்பர் 31 வரை சங்கங்கள் பதிவு செய்து கொடிகளை விற்ற பணத்தில் இருந்து ரூபா 91,000,000 ஆன நிலையான வைப்பு நிலுவைகள் பராமரிக்கப்பட்டு வருவதுடன் , ஒருங்கிணைக்கப்பட்ட நிதியத்திற்கு ரூபா 10,000,000 மட்டுமே செலவு வைக்கப்பட்டிருந்தது.

3.6.3 சமூக அடிப்படையிலான வங்கி மற்றும் வங்கிச்சங்கங்களை செயற்படுத்தல்

திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கி மற்றும் சமூக அடிப்படையிலான வங்கிச் சங்கங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்வை மேற்கொள்வதற்கு முடியுமான சட்டரீதியான ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டு சட்டத்தை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2022 திசெம்பர் 31 இல் மென்பொருளை கொள்வனவு செய்தல் உட்பட "e" செய்திப் பத்திரிகை முதல் பக்கம் தயாரிப்பதற்காக ரூபா 7,723,900 செலவிடப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில், e செய்தித்தாள் பாவனையாளரின் எண்ணிக்கை 56,234 ஆகவும், e செய்தித்தாள் தொலைபேசி செயலி (e paper app) பாவனையாளரின் எண்ணிக்கை 21,565 ஆகவும் அதாவது மொத்த சமூர்த்தியாளர்களில் 4.6 சதவீதமாக இருந்தமையால் செயற்பாடு மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

3.8 வெளிநாட்டுதவி அடிப்படையிலான மானியக் கொடுப்பனவு

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிக்கவும், சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், உலக வங்கி உதவியின் கீழ் 2022 நிதி மானியமாக ரூபா 39,640 மில்லியன் தொகையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தரவு அமைப்பின்படி, சமுர்த்தி காத்திருப்பு பட்டியல்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வங்கிகளுக்கு பணம் அனுப்பப்பட்டிருந்தும் மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் 78,604 பயனாளிகளின் கணக்குகள் பல்வேறு காரணங்களுக்காக வங்கியால் அகற்றப்பட்டிருந்தும் அப்பயனாளிகளின் பணமும் அனுப்பப்பட்டுள்ளது. திணைக்களத்திற்கு சொந்தமான தரவு அமைப்பு சரியாக நாளதுவரையாக்கப்படாமை இதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) மானியப் பண விநியோகம் தொடர்பாக, பல சமூக அடிப்படையிலான வங்கிகளில் நடாத்தப்பட்ட மாதிரிச் சோதனையின் போது, 02 பிரதேச செயலகப் பிரிவுகளின் இரண்டு சமூக அடிப்படையிலான வங்கிகளால் நிதி மானியமாக மேலதிக கொடுப்பனவுகள் மொத்தம் ரூபா 55,529,060 ஆனது 22 நாட்கள் முதல் 106 நாட்கள் வரை பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் சமூக அடிப்படையிலான வங்கிகளில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

3.9 பெறுகைகள்

(அ) 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய PFD/08/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொது நிறுவனங்கள் 2020 ஆம் ஆண்டு முதல் மின் பெறுகை செயல்முறையை பின்பற்ற வேண்டுமென்பதுடன் திணைக்களம் தேசிய மின் அரச பெறுகை அமைப்பில் பதிவு செய்யப்பட வேண்டும். ஆனால் இந்த அறிக்கைத் திகதி வரையில் திணைக்களம் பதிவு செய்யப்படவில்லை. சந்தை விலைமனுக்கோரல் முறையின் கீழ் செய்யப்படும் பெறுகைகள் 2020 ஆம் ஆண்டு முதல் மின் பெறுகை முறை

மூலம் செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) பெறுகை திட்டம் தயாரிக்கும் போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) மற்றும் 4.2.2(அ) இன் பிரகாரம் பெறுகை செயற்பாடுகள் விரிவாகவும் மற்றும் பெறுகை கால அட்டவணையில் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

3.10 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை

மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 12 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிப்பதற்கு 1 மாதம் முதல் 5 மாதங்கள் வரையான காலப்பகுதியொன்று தாமதமாகியிருந்ததுடன் 5 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்தது. அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 4,254,728,365 ஆகும்.

3.11 2016.12.16 ஆம் திகதி நடைபெற்ற குழுக்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட உத்தரவுகள் செயற்படுத்தப்படாமை

உத்தரவு இலக்கம்	உத்தரவு	தற்போதைய நிலைமை
7.3	திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் 6 சந்தர்ப்பங்களில் ரூபா 54.02 மில்லியன் அச்சீட்டு பணிகள் உரிய நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக உள்ளக சோதனையொன்று நடாத்தப்பட்டு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு உத்தரவிடப்பட்டமை.	உள்ளக சோதனை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
9.1	பொது திறைசேரியின் அங்கீகாரமின்றி ரூபா 106,873,148 ஆன தொகை செலவிடப்பட்டு நீர்த் தாங்கி கொள்வனவு செய்யப்பட்டமை, கணக்காய்விற்கு தகவல்களை சமர்ப்பிக்காமை மற்றும் போக்குவரத்துக்காக விலை மனுக்கள் கோரப்படாமல் நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டமை மற்றும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை.	இது தொடர்பான ஆரம்பகட்ட விசாரணைகள் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்பட்ட போதிலும், கொள்வனவுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

9.4	திவிநெகும மாநாடுகளுக்கு ரூபா 16,629,435 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் நாற்காலிகள் உட்பட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விளம்பர நடவடிக்கைகளுக்காக ரூபா 1,954,300 செலவிடப்பட்டமை.	மொத்தம் ரூபா 16,629,475 ஆன உபகரணங்கள் மற்றும் நாற்காலிகள் விநியோகம் தொடர்பாக இதுவரை கணக்காய்விற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை.
9.5	5,000,000 திவிநெகும நூல்களை அச்சிடுவதற்கு ரூபா 29,400,000 செலவிடப்பட்டமை மற்றும் அனைத்து அச்சீடுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தாமை.	இதுவரை உள்ளக சோதனை நடவடிக்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

4. மனித வள முகாமைத்துவம்

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் பின்வருமாறு இருந்தது.

		2022.12.31 இல்		
வகை	**அங்கீகரிக்கப்பட்ட**	**உள்ளபடியான**	**வெற்றிடம்**	**மிகை**
சிரேஷ்ட	108	79	29	
மூன்றாம்	1,942	1,646	296	
இரண்டாம்	25,509	23,339	2,170	2,485
ஆரம்ப	516	417	99	6
	--------	---------	---------	-----
மொத்தம்	28,075	25,481	2,594	2,491
	======	======	======	====

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்கத்தின் கொள்கை தீர்மான அடிப்படையில் 2,287 பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்படடிருந்ததுடன் அதற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திருத்தம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் சமுர்த்தி முகாமையாளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமாக 132 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(ஆ) தலைமை அலுவலகத்தின் பணிகள், மாவட்ட அலுவலகங்களின் பணிகள் மாவட்டத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு சமூக வங்கி பிரிவுகளில் உள்ள அதிகாரிகளின் பதவிக்கு ஏற்ப ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பான பதவியணியினர் மீளாய்வொன்று இல்லாமல் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

(இ) சமுர்த்தி முகாமையாளர் பதவியை வகிக்கும் 108 அதிகாரிகள் தலைமைக் காரியாலயத்திற்கு நியமிக்கப்படடிருந்தனர். ஆனால் சமூக வங்கிகளில் பதில்

கடமை மற்றும் பணி மேவுகைக்காக முகாமையாளர்களாக 123 பேர் வங்கி பதவியணியினருக்கு நியமிக்கப்பட்டு பதில் கடமைக் கொடுப்பனவாக ரூபா 4,096,380 ஆனது 2022 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்டது. இதன் பிரகாரம் திணைக்களத்தின் பணிகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்படக்கூடிய வகையில் பதவியணியினர் பணியமர்த்தப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2019 யூலை 05 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் 2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் 25(3) பிரிவின் பிரகாரம் சமூக அடிப்படையிலான வங்கி பதவியணியினர்களுக்காக ஓய்வூதியத்துடன் அரசாங்க ஊழியர்களை நிரந்தர அடிப்படையில் நியமித்தல் சட்டத்திற்கு முரண் என்பதாக கௌரவ சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டிருந்தமை, சமூக அடிப்படையிலான வங்கி சங்கங்களில் தற்போதும் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற திவிநெகும சட்டத்தின் 44(உ) மற்றும் ii இன் கீழ் திணைக்களத்தில் சேவைக்கு சேர்ந்த உத்தியோகத்தர்கள் தற்காலிக அடிப்படையில் அந்த நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டதாக கவனத்தில் கொள்ள வேண்டியிருந்ததுடன், எதிர்காலத்தில் வங்கி பதவியணியினருக்காக பிரத்தியேக பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும், அதன் பின்னர் வெற்றிடமான பதவிகளுக்காக அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புக்களை சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தும் , இதுவரை இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாததடன் 7605 வங்கி ஊழியர்களுக்கு திணைக்கள செலவு விடயத்தின் கீழ் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆணடிற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 4,259.25 மில்லியன் ஆகும்.

(உ) ஓய்வூதிய உரித்தின்றிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் தொடர்ச்சியாக பங்களிப்பினைச் செலுத்தி திணைக்கள சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு நடைமுறையை அங்கீகரித்தலானது இது வரை முடியாதிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் அந்த ஊழியர்களின் எண்ணிக்கை 546 ஆக இருந்ததடன் அத்தினத்தில் ஓய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை 41 ஆக இருந்தது.

(ஊ) வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி, திணைக்களத்தில் உள்ள ஊழியர்களின் உண்மையான எண்ணிக்கை 24,647 என மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டள்ளபோதிலும் உண்மையாக சம்பளம் செலுத்தப்படுகின்றவர்களின் எண்ணிக்கை 25,481 ஆகும். இதன்படி, வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இடம்பெறாத 445 இணைந்த சேவை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய 389 உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் செலுத்தப்படுவது தொடர்பில் கணக்காய்வின்போது கேள்விகள் எழுப்பப்பட்டன.

எம்.ரீ.ஐ.கமகே
சிரேஷ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்காக.

அத்தியாயம் – 04 – செயலாற்றுகை சுட்டு

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டு

தொ.இ.	வேலைத்திட்டம்	திசேடமான சுட்டு	எதிர்பார்த்தி நிறைவு வீதம் (%) ஆக நிலமை நிறைவு		
			100% -90%	75% -89%	50% -74%
01	சமூக நலநோம்பு வேலைத்திட்டம்	வறுமையான குடும்பங்கள் 1,760,485 க்கு சமுர்த்தி மானிய உதவி வழங்கள்	100%		
		பொருளாதபர கஸ்டநிலை காரணமாக தாக்கத்துக் குள்ளான குடும்பங்கள் 2,575,366 க்கு உலகவங்கி உதவியின் கீழ் ரூ.3,000/- இருந்து ரு.5,000/- வரை அவசர நிதி உதவி வழங்கியமை.	100%		
		பொருளாதபர கஸ்டநிலை காரணமாக தாக்கத்துக் குள்ளான குடும்பங்கள் 2,989,924 க்கு உலகவங்கி உதவியின் கீழ் ரூ.3,000/- இருந்து ரு.5,000/- வரை அவசர நிதி உதவி வழங்கியமை.	100%		
02	சமூக பாதுகாப்பு வேலைத்திட்டம்	சமுர்த்தி பயனாளிக் குடும்பங்கள் 161,874 க்கு சமூகப்பாதுகாப்பு பிரதிபலன் வழங்கப்பட்டமை	100%		
		ஊயர் கல்வி கற்கின்ற சமுர்த்தி பயனாளி குடும்பப் பிள்ளைகளுக்கு சிப்தொர புலமைப் பரிசில் வழங்கள்	100%		
03	வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம்	மேலதிகப் பயிர்செயகைத் திட்டத்தின் கீழ் பயனாளிகள் 122 பேருக்கு பயறு, நிலக்கடலை மற்றும் மிளகாய் பயிர் செய்கைக்கு உதவி வழங்கியமை.			40%
		வீட்டுத் தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பிரிவு மட்டத்தில் வீட்டுத் தோட்ட அபிவிருத்திக்கு வீட்டுத் தோட்டக்காரர் 140,210 பேருக்கு நாற்றுக்கள் மற்றும் கன்றுகள் வழங்கியமை		70%	
04	தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டம்	சமுர்த்தி ஆரோக்கிய உணவகம்கள் 07 இனை பொழிவூட்டியதன் காரணமாக சமுர்த்தி தொழில் முயற்சியாளர் குடும்பங்கள் 175 இன் வாழ்க்கை மட்டம் உயர்வடைந்தமை.			60%

தெ ா. இ.	வேலைத்திட்டம்	விசேட சுட்டி	எதிர்பார்த்தி நிறைவு வீதம் (%) ஆக நிலமை நிறைவு		
			100% - 90%	75% -89%	50% -74%
		விற்பசைன் சந்தைகள் 230 நடாத்துதல்		80%	
		சமுர்த்தி தொழில் முயற்சியாளர்களுக்கு தொழில் முயற்சி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் 275 நடாத்தியமை		85%	
